வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 01 | 29.06.2021 செவ்வாய்க்கிழமை | இதழ் : 208 | பக்கங்கள் : 16




# வட மாகாண கடல்வளத்தை சீனர்கள் சுரண்டும் அபாயம்!

## த. தே. கூட்டமைப்பு கடும் கண்டனம்

கிளிநொச்சி, ஜூன் 29

“வடக்கு மாகாண கடல் வளத்தை வெளிமாவட்ட மீனவர்கள் கையகப்படுத்தும் நிலை மாறி தற்போது சீனர்கள் உள்ளிட்ட வெளிநாட்டவர்கள் சுரண்டும் நிலை உருவாகியுள்ளது. இதை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.”

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

15

## கொண்டாட்டங்களுக்கு தொடர்கின்றது தடை!

### மீறுவோர் கைதாவர்

கொழும்பு, ஜூன் 29

பயணத் தடை கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ள நிலையில் கொண்டாட்ட நிகழ்வுகள் மற்றும் ஒன்றுகூடல்களுக்கு விதிக்கப்பட்டுள்ள தடை தொடர்வதாகவும், அதனை

15

## யாழில் 58 பேருக்கு தொற்று: 4 நோயாளர்கள் வடக்கில் பலி!

யாழ்ப்பாணம், ஜூன் 29

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நேற்று 58 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் 60 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது. அத்துடன், யாழ்ப்பாணத்தில் மூவரும், மன்னா ரில் ஒருவருமாக வடக்கில் 4 பேர்

15

## ஹிருணிகா பிரேமச்சந்திரவின் பாதுகாப்பை பலப்படுத்துங்கள்!

### அரசிடம் கோருகிறார் பொன்சேகா



கொழும்பு, ஜூன் 29

ஹிருணிக்கா பிரேமசந்திர மற்றும் அவரின் தாயாருக்கு உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளை அரசாங்கம் வழங்கவேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட்மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில்

15

## 1,850 பேருக்கு நேற்று கொரோனா தொற்று

கொழும்பு, ஜூன் 29

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 1,850 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 55 ஆயிரத்து 468 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன்,கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 2 ஆயிரத்து 251 பேர் நேற்று குணமடைந்து வீடு திரும்பினர்.

15

## கொரோனாவால் மேலும் 41 பேர் நேற்று உயிரிழப்பு!

கொழும்பு, ஜூன் 29

கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 41 பேர் நேற்றுமுன்தினம் உயிரிழந்தனர். இது தொடர்பான அறிவித்தலை சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் நேற்று மாலை வெளியிட்டார்.

24 ஆண்களும், 17 பெண்களுமே இவ்வாறு உயிரிழந்தனர். இதன்படி வைரஸ் தொற்றால் பலியானவர்களின் மொத்த எண்ணிக்கை 2 ஆயிரத்து 985 ஆக அதிகரித்துள்ளது.

## அரசியல் சூதாட்டத்துக்கு தயாராகிறது அரசாங்கம்

### திஸ்ஸ அத்தநாயக்க குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 29

பசில் ராஜபக்ஷ அல்லது அரசாங்கத்திலுள்ள எவராவது ஒருவரால் எரிபொருள் விலை மீண்டும் குறைக்கப்பட்டால் அது சிறந்த விடயமாகும். ஆனால் இவர்கள் அரசியல் சூதாட்டத்துக்கே தயாராகின்றனர். ஒத்துழைப்புடன் அரசாங்கமொன்றை

15



## 4 மில்லியன் டொலர் பெறுமதியான மருத்துவ உதவியை வழங்கிய சுவிஸ்!

கொழும்பு, ஜூன் 29

4 மில்லியன் அமெரிக்க டொலர் மருத்துவ உதவிகளை சுவிட்சர்லாந்து அரசு இலங்கைக்கு நன்கொடையாக வழங்கியுள்ளது.

இலங்கைக்கான சுவிற்சர்லாந்து தூதுவர் டொமினிக் போர்க்லர் நேற்று முற்பகல் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்து மருத்துவ நன்கொடைகளை கையளித்தார்.

கோவிட் சவாலை வெற்றி கொள்வதற்கு இலங்கை உள்ளிட்ட ஆசிய நாடுகளுக்கு சுவிட்சர்லாந்து அர

15

## அரியாலை கடலட்டை தொழிற்சாலை பணிப்பாளர்களாக இரண்டு சீனர்கள்!

யாழ்ப்பாணம், ஜூன் 29

அரியாலையில் இயங்கிவரும் கடல் அட்டைத் தொழிற்சாலையில் சீனர்கள் பணியில் ஈடுபட்டுள்ளமை தொடர்பான தகவல்கள் வெளியான நிலையில் இந்த கடலட்டை தொழிற்சாலை சீனர்களையும் பணிப்பாளர்களாக உள்ளடக்கி இலங்கை கம்பனி பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளமை ஆவணங்கள் மூலம் தெரியவந்துள்ளது.

குயிலன் பிரைவேட் லிமிடெட் என்ற பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள இந்த கடலட்டை நிறுவனதின் 3 பணிப்பாளர்களில் ஒருவராக நீர்கொழும்பைச் சேர்ந்த தம்மிக்க டி சில்வா என்பரது பெயர் பதிவாகியுள்ளது.

15




## தொற்றாளர்களின் எண்ணிக்கை குடாநாட்டில் 5,000ஐ தாண்டியது

### மாவட்ட செயலர் மகேசன் தகவல்



யாழ்ப்பாணம், ஜூன் 29

யாழ். மாவட்டத்தில், கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை ஐயாயிரத்தை தாண்டியுள்ளதாக, யாழ். மாவட்ட செயலாளர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இன்று (நேற்று) மாலை

15

## இப்படியும் நடக்கிறது…!

மனநலம் பாதித்த ஒருவர், ஒரு மின் கம்பத்தைச் சுற்றிக்கொண்டே,' "ஆண்டவனே, எனக்கு பத்து ரூபாய் கொடு," என்று திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டி ருந்தார்.

அவ்வழியே போன ஒருவர் அவர் மீது இரக்கப்பட்டு ஐந்து ரூபாய் கொடுத்துச் சென்றார்.

மறுநாள் மீண்டும் அவர் அப்பாதை வழியாக வரும் போது அந்த மனநலம் பாதித்தவர் முதல்நாள் போலவே, "ஆண்டவனே,எனக்குப் பத்து ரூபாய் கொடு" என்று சொல்லிக் கொண்டிருந்தார்.

இவரைப் பார்த்தவுடன் அவர் உரக்க, "ஆண்டவனே, இம்முறை நீயே நேரடியாக பத்து ரூபாய் கொண்டு வந்து கொடு. நேற்று நீ பத்து ரூபாய் கொடுத்து அனுப்பிய ஆள் ஐந்து ரூபாய் எடுத்துக் கொண்டு ஐந்து ரூபாய்தான் என்னிடம் கொடுத்தான். மகா திருடன்" என்று கூவினார்.

பொசன் போயா தினத்தில் பதினாறு கைதிகள் விடுதலை தொடர்பாக நமது சிவஞானம் சிறிதரன் எம்.பி. தெரிவித்த கருத்துக்கள் நேற்று முன்தினம் வெளியாகியிருந்தன. இப்போதெல்லாம் நமது தலைவர்கள் எதற்கெடுத்தாலும் சர்வதேசத்தை துணைக்கு அழைத்து விடுகின்றனர்.

எங்கள் கிராமத்தில் ஓர் அரசியல் பேச்சாளர் இருந்தார். அந்தக் காலத்தில் நாங்கள் வாலிபர்களாக இருந்தபோது அவர் அரசியல் மேடைகளில் பேசக் கேட்டது இன்றும் ஞாபகத்தில் இருக்கின்றது.

குறிப்பாக தேர்தல் காலங்களில் வயல்வெளிகளிலும் சந்திகளிலும் கூட்டங்கள் நடக்கும்.

அவர் பேசும்போது இடையே கேட்பார், இப்படித்தான் ரஷ்யாவில் என்ன நடந்தது….? உரத்த குரலில் அவர் கேட்கின்றபோது கைதட்டல்கள் விழும். கைதட்டுவோ ருக்கு அவர் சொல்கின்ற ரஷ்ய சங்கதி தெரிந்திருக்காது. கைதட்டுவோருக்கு மட்டுமல்ல பேச்சாளரும் சும்மா எதுகைமோனையுடன் பேசுவதற்காகவே அப்படிக் கேட்டார் என்பது அவரைத் தெரிந்தவர்களுக்குத் தெரியும்.

இதேபோலத்தான் இப்போது நமது தலைவர்கள் எதற்கெடுத்தாலும் சர்வதேசத்தைத் துணைக்கு அழைக்கின் றனர்.

சிறிதரன் எம்.பி.யும், கைதிகள் விடுதலையோடு சர்வ தேசத்தைத் துணைக்கு அழைத்திருக்கிறார்.

இலங்கை அரசாங்கம் எதிர்கொள்ளும் சர்வதேச அழுத் தங்களைச் சமாளிப்பதற்காகவே தமிழ் அரசியல் கைதி களுக்கு விடுதலை வழங்கப்பட்டது என்ற அவரின் அறிவிப் பைப் பார்த்ததும் தமிழ் மக்கள் நிம்மதிப் பெருமூச்சு விட்டி ருப்பார்கள். இனி எங்கட பக்கத்துவீட்டு வேலிப் பிரச்னை யையும் சர்வதேசத்தைக் கொண்டு தீர்த்துவிடலாமோ என்று யோசிக்கத் தொடங்குவார்களோ தெரியவில்லை.

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஏழு உறுப்பினர்கள் பாராளு மன்றத்திற்கு தெரிவுசெய்யப்பட்டனர். இந்தத் தொகை ஏழில் இருந்து அடுத்த தேர்தலில் ஆறாகக் குறைக்கப் பட்டுள்ளது. இதனால், அடுத்த தேர்தலில் வெற்றிபெற முடியுமா என்ற சந்தேகம் பலருக்கும் வந்துவிட்டது. இதனால்தானோ என்னவோ தத்தமது சுயங்களை மறந்து அரசியல் செய்யத் தொடங்கிவிட்டனர்.

சர்வதேச அழுத்தங்களைச் சமாளிப்பதற்காகவே தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர் என்று கூறிய சிறிதரனே, அரசியல் கைதிகள் 16 பேரின் விடுதலை என்பது இந்த அரசாங்கம், மரண தண்டனைக் கைதி ஒருவரை விடுதலை செய்யும் வகையில் முலாம் பூசப்பட்ட விடயமாகும் என்றும் கூறியிருக்கிறார்.

அதே அறிக்கையில் பின்னர், சிறைகளில் இருக்கின்ற அனைத்து தமிழ் அரசியல் கைதிகளையும் விடுவிக்க அரசாங கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை வைக்கின்றார்.

அட, சர்வதேச அழுத்தங்கள் தொடரத்தானே போகின் றது. எனவே, மிகுதியாக இருக்கின்ற கைதிகளையும் அரசாங்கம் விடுதலை செய்தால்தான் அந்த அழுத்தங்களிலி ருந்து தப்பலாம் என்று நம்பிக்கை தருவதற்கு பதிலாக அவர் கோரிக்கை வைக்கிறார்.

இனி, அழுத்தம் கொடுத்து அரசு விடுவிப்பதற்கு பதிலாக, சர்வதேசமே வந்து கைதிகளை விடுவிக்கவேண்டும் என்று யாரும் கேட்பார்களோ தெரியவில்லை…!

**- ஊர்க்குருவி**

# 19 மாத ஆட்சியின் முழு அலங்கோலத்தையும் கொரோனா என்ற திரையால் மூடவே முடியாது

## மனோ எம்.பி. தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 29

"விலைவாசி உயர்வுக்குக் கொரோனா காரணம் என்று காட்டும் ஜனாதிபதியால், தனது 19 மாத ஆட்சியின் முழு அலங் கோலத்தையும் கொரோனா என்ற திரையைப் போட்டு மூட முடியாது."

- இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணி யின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. தெரி வித்தார்.

"ஒரு நாளைக்கு ஆயிரம் என முப்பது நாளைக்கு முப்பதாயிரம் ரூபாய் சம்பளத்தைத் தோட்டத் தொழிலாளர் பெறுகின்றார்கள் என நீங்கள் நினைக்கிறீர்களா? தனது உரையில், 'சிலோன் டீ' பற்றி பேசிவிட்டு, தோட்டத் தொழிலாளரை மறந்த ஜனாதிபதி கோட்டா பயவிடம் இதை நான் கேட்க விரும்புகின் றேன்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் இது பற்றி மனோ எம்.பி. மேலும் கூறியதாவது:-

"ஜனாதிபதி கோட்டாபயவை நினைத்து, எல்லே குணவன்ச தேரர் இன்று கண்ணீர் விட்டு அழுகின்றார். இன்னொருவரான முருத்தெட் டுவே தேரர் திட்டி தீர்க்கிறார். உண்மையில் அழ வேண்டியது அவர்கள் அல்லர், நாங்களே. ஆனால், இவர்கள் அழுது திட்டுகின்றார்கள். இவர்கள்தான் இந்த ராஜபக்ஷ அரசை உரு வாக்கிய பௌத்த தேரர்கள். இவர்களின் அழுகையும், திட்டுமே இந்த அரசின் இலட் சணத்தைப் படம் பிடித்துக் காட்டுகின்றது.

இன்று இந்நாட்டில் ஆடைத் தொழில் ஏற்றுமதியின் எதிர்காலம் சந்தேகத்துக்கு உரிய தாக இருக்கிறது. இவர்களின் மனித உரிமை மீறல் காரணமாக ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகை இல்லாமல் ஆக போகின்றது. இதனால், இந்த ஏற்றுமதி வருமானம் நின்று போகலாம். சுற்று லாத்துறை முழுமையாக நின்று போய் விட் டது. மத்திய கிழக்கு பணியாளர்களின் வாழ் வும், வருமானமும் இன்று கேள்விக்கு உரியதாக மாறி உள்ளது.

இந்நிலையில், இன்றும் அன்றும், என்றும் இலங்கைக்கு வெளிநாட்டு வருமானத்தை பெற்று தருவது தேயிலை ஏற்றுமதியே. இதனா லேயே ஜனாதிபதி நாட்டு மக்களுக்கான தனது உரையில், "சிலோன் டீ" பற்றி பேசினார். ஆனால், "சிலோன் டீ"யின் பின்னால் உள்ள உழைப்பாளிகளின் உயிர் வாழ்வு அவருக்கு மறந்து விட்டது.

தோட்டத் தொழிலாளரை அப்படியே தொழில் அமைச்சர் நிமல் சிறிபால சில்வா விடம் ஒப்படைத்து விட்டு நீங்கள் சும்மா இருக்கிறீர்கள். அவர்களைத் தோட்ட நிறுவனங் களிடம் பணயக்கைதிகளாக விட்டு விட்டீர்கள். உங்களை அரசில் தோட்ட தொழிலாளரை பிரதிநிதித்துவம் செய்வதாக சொல்லும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் என்ற கட்சி குறட்டை விட்டு தூங்குகிறது.

இலங்கை சிலோன் தேயிலை தொடர்பாக பேசிய ஜனாதிபதி, இலங்கைத் தேயிலையின் பின்புலத்தில் இருக்கும் தோட்டத் தொழிலாளர்கள் தொடர்பில் பேச மறந்துள் ளார். அது தொடர்பில் ஜனாதிபதிக்கு நாங்கள் ஞாபகப்படுத்த விரும்புகின்றோம். எப்பொழு தும் போலவே இன்றும் நாட்டில் மிஞ்சியுள் ளது, தேயிலை உள்ளிட்ட தோட்டப்பயிர்கள் ஏற்றுமதித் தொழில்துறை மட்டுமே.

இந்தத் தொழில் துறையில் ஈடுபட்டுள்ள தோட்டத் தொழிலாளர்களின் தற்போதுள்ள நிலைமை தொடர்பில் ஒரு கணமேனும் நினைத் துப் பார்த்தீர்களா என அவரிடம் நான் வினவ விரும்புகின்றேன், கவலை கொள்கிறேன். அவர் சற்றும் அதுகுறித்து நினைத்துப் பார்த்தது போல் தெரியவில்லை. தோட்டத் தொழிலாளர் களும் இந்த நாட்டின் பிரஜைகளே.

தொழிலாளர்களுக்கு 1000 ரூபாய் பெற்றுத் தருவதாக புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும், அவர்களுக்கு எத்தனை நாட்களுக்கு அந்த சம்பளம் வழங்கப்படுகிறது? நாள் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் வீதம் 30 நாட்களுக்கு முப்பதாயிரம் ரூபாய் கிடைப்பதாக ஜனாதிபதி நினைக்கிறாரா? அவ்வாறு இல்லை. ஏழு அல்லது எட்டு நாட்களுக்கான சம்பளமே அவர்களுக்குக் கிடைக்கிறது.

அதுபோல, நாளொன்றுக்கு அவர்கள் பறிக்க வேண்டிய கொழுந்தின் எடை, தோட் டத்திற்கு தோட்டம், நிர்வாகத்திற்கு நிர்வாகம் மாறுபடுகிறது. தான்தோன்றித்தனமாக அவர்கள் அதனை நிர்ணயித்துக் கொள்கின்ற னர். புத்தகத்திலே குறிப்பிடப் பட்டிருப்பதைப் போன்று அவர்களுக்கு சம்பளம் வழங்கப்படு கின்றது என்ற எண்ணப்பாட்டுக்கமைய, அந்த நியாயம் அவர்களுக்கு கிடைக்கவில்லை, 5000 ரூபாய் உதவிப் பணமும் அவர்களுக்கு கிடைப்ப தில்லை,

தோட்ட தொழில் துறை இது ஒரு ஏற்றுமதி தொழில். இதில் எப்படி கொரோனா வருகிறது? வருமானம்தான் வருகிறது. இதில் கிடைக்கும் அரசின் வரி வருமானம் மூலம் தோட்ட தொழி லாளருக்கு நிவாரணம் வாங்குங்கள்.

இதேபோல் நடுக்கடலில் மிதந்த இரசாயன திரவியம் கொண்ட, தீப்பற்றிய கப்பலை யார் இங்கே இலங்கை கடலுக்குள் கொண்டு வர சொன்னது? துறைமுக மாஸ்டரா ? அல்லது உங்கள் அமைச்சரா? உங்கள் அரசா? அதில் பெருந்தொகை காப்புறுதி கிடைக்கும் என கற்பனை செய்தீர்களா?

இதனால் இன்று பாணந்துறை முதல் நீர்கொழும்பு வரை தோட்ட தொழிலாள ரைப்போல், மீனவர்களும் நடுத்தெருவுக்கு வந்து கொண்டுள்ளார்கள். அது மன்னார் வரை போய் விட்டது. அவர்கள் வாழ்க்கை உடை கிறது. நம் கடலின் மீனவ செல்வங்கள் பேரழிவை சந்திக்கின்றன. அதேபோல் இலங்கை மக்களின் சாப்பாட்டு மேசைகளில் இன்று மீன் உணவு இல்லை. மீன் வாங்க சமைக்க எல்லோரும் பயப்படுகிறார்கள். மீன் உணவும் இல்லை. மீனவர் வாழ்வும் இல்லை.

அதேபோல், உங்கள் உரக்கொள்கை சந்தி சிரிக்கிறது. இரசாயன உரம் வேண்டாம். சேதன உரம் வேண்டும். என்ற கொள்கை பற்றி எங்க ளுக்கு நீங்கள் தொலைக்காட்சியில் வந்து விரிவுரை நடத்த வேண்டாம். அது எங்களுக்கு தெரியும். அதை ஒரே நாளில் செய்ய முடியாது. உலகில் நூற்றுக்கு நூறு சேதன உரத்தால், பயிர் செய்யும் நாடு என்ற ஒன்று கிடையாது.

நெல் விவசாயிகள் மட்டுமல்ல, காய்கறி விவசாயிகள், கிழங்கு விவசாயிகள், தேயிலை பயிர் என நாடு முழுக்க இதனால் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. மகசூல் குறைய போகிறது. இன் றைய நாளை விட, இன்னமும் சில மாதங்களில் நிலைமை மோசமடையப் போகின்றது. இது தொடர்பாக உங்களுக்கு யாரோ கொடுத்த இற்றுப்போன கயிற்றை நீங்கள் விழுங்கி, சாப்பிட்டு விட்டீர்கள். அதுதான் உண்மை.

ஆகவே, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக் ஷவே! உங்களது பத்தொன்பது மாத அலங் கோல ஆட்சியினால், தோட்ட தொழிலாளர் கள், மீனவர்கள், விவசாயிகள் ஆகிய அனை வரும் இன்று வாழ்விழந்து தெருவுக்கு வந்து கொண்டிருக்கிறார்கள்" - என்றார். (இ)

## 142 இலங்கையர் கொரோனாவால் மத்திய கிழக்கில் உயிரிழப்பு

கொழும்பு, ஜூன் 29.

மத்திய கிழக்கு நாடுகள் உள்ளிட்ட 16 நாடுகளில் பணி புரியும் 142 இலங்கையர்கள், கொரோனா வைரஸ் தொற் றால் உயிரிழந்துள்ளனர் என்று வெளிநாட்டு வேலைவாய்ப் புப் பணியகம் தெரிவித் துள்ளது.

இலங்கைத் தொழிலாளர்க ளில் 4 ஆயிரத்து 800 இற்கும் அதிகமானவர்கள் கொரோ னாத் தொற்றுக்குள்ளாகியுள்ள னர் எனவும், அவர்களில் 4 ஆயிரத்து 600 பேர் தொற்றி லிருந்து குணமடைந்துள்ளனர் எனவும் வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் ஊடகப் பேச்சாளர் மங்கல ரந் தெனிய தெரிவித்துள்ளார். (இ)

ஈழநாடு
Eelanadu
29.06.2021 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம், ஆனி 15

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
**தொலைபேசி : 021 730 1370**

## தமிழ் கட்சிகளுக்கிடையிலான ஒற்றுமை?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் தமிழீழ விடுதலை இயக்கம் ( ரெலோ ) தமிழ் கட்சிகளுடனான கலந்துரையாடல் ஒன்றை ஏற்பாடு செய்திருந்ததாக செய்திகள் வெளியாகியிருந்தன. பின்னர் அந்த சந்திப்பு பிற்போடப்பட்டது. தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு இடையிலான ஒற்றுமை தொடர்பில் இதற்கு முன்னரும் பலரும் பேசியிருக்கின்றனர். சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் மதத் தலைவர்களின் பங்குபற்றலுடன் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. மாற்றுத் தலைமை ஒன்றை உருவாக்கும் நோக்கிலும் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆனாலும் எந்தவொரு முயற்சியும் வெற்றியளிக்கவில்லை. ஏன் வெற்றியளிக்கவில்லை? இந்தப் பின்னணியில் ரெலோவின் முயற்சி வெற்றியளிக்குமா?

2009இல் யுத்தம் முடிவுற்றபோது, தமிழ் மக்களுக்கு முன்னால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டுமே இருந்தது. ஆனால், இன்று எத்தனை கட்சிகள் இருக்கின்றன? இத்தனை கட்சிகள் எவ்வாறு உருவாகின? ஒரு சிறிய தேசிய இனமான தமிழ் மக்களுக்கு இத்தனை கட்சிகள் தேவைதானா? தமிழ்த் தேசிய அடிப்படையில் ஒற்றுமை உருவாகியிருக்குமாயின் பின்னர் எவ்வாறு இத்தனை கட்சிகள் உருவாகின? இத்தனை கட்சிகளும் யாருடைய நன்மைக்காக இயங்குகின்றன? கட்சிகள் பெருகியதால் தமிழ் மக்களுக்கு கிடைத்த நன்மை என்ன?

இங்கு முன்வைக்கப்பட்டிருக்கும் எந்தவொரு கேள்விக்குமே இன்றுள்ள தமிழ்க் கட்சிகளால் பதிலளிக்க முடியாது. ஏனெனில், மக்களின் நன்மையை கருத்தில் கொண்டு செயல்பட்டிருந்தால் ஆளுக்கொரு கட்சி என்னும் சிந்தனை உருவாகியிருக்காது. கூட்டமைப்பிற்குள் ஏற்பட்ட முரண்பாடுகளிலிருந்தே இந்த உடைவுகள் துளிர்விட்டன. கூட்டமைப்பு உள் முரண்பாடுகளை சரியாகக் கையாண்டிருந்தால், ஆளுக்கொரு கட்சி என்னும் எண்ணத்தை முளையிலேயே கருக்கியிருக்கலாம்.

ஆனால், கூட்டமைப்பின் தலைவர்கள் முரண்பாடுகளை சரியாகக் கையாளவில்லை. இதில், ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதனுக்கும் பங்குண்டு. 2015ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் சுரேஷ் பிறேமச்சந்திரன் தோல்வியடைந்தபோது, ஒற்றுமையை கருத்தில்கொண்டு, இரண்டு தேசிய பட்டியல் ஆசனங்களில் ஒன்றை சுரேஷுக்கு வழங்குமாறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டிருந்தன.

ஆனால், அந்தச் சந்தர்ப்பத்தில், ரெலோ தேசியப் பட்டியல் ஆசனத்தைத் தங்களுக்குத் தருமாறு கோரிக்கை முன்வைத்தது. இந்த அடிப்படையில் ஓர் ஆசனத்தை இரண்டரை வருடங்கள் என்னும் அடிப்படையில் ரெலோவிற்கு கொடுப்பதற்கு சம்பந்தன் இணங்கியிருந்தார். முதல் கட்டமாக குறித்த ஆசனம் திருகோணமலைக்கு வழங்கப்பட்டது. துரைரட்ணசிங்கம் பாராளுமன்ற உறுப்பினரானார். ஆனால், அந்த இரண்டரை ஆண்டுகள் கழிந்த பின்னர், குறித்த இடம் ரெலோவிற்கு வழங்கப்படவில்லை. உண்மையில் சுரேஷ் பிறேமச்சந்திரனை கூட்டமைப்பிலிருந்து வெளியேற்றும் ஒரு துருப்புச்சீட்டாகவே, குறித்த தேசியப் பட்டியல் விவகாரம் பயன்படுத்தப்பட்டது. செல்வம் அடைக்கலநாதன் சுரேஷுக்கு ஆதரவாக இருந்திருந்தால் ஒற்றுமை பாதுகாக்கப்பட்டிருக்கும்.

தேர்தல் நலனுக்காக ஒற்றுமையை பலியிடும் அரசியலையே அனைத்துத் தரப்பினரும் முன்னெடுத்து வந்திருக்கின்றனர். இதன் காரணமாகவே, இன்று வரையில் தமிழ்க் கட்சிகளை ஒன்றுபடுத்தும் முயற்சியில் எவராலும் வெற்றிபெற முடியவில்லை. கட்சிகளால், ஒரு போதும் கட்சிகளை ஒற்றுமைப்படுத்த முடியாது. ஏனெனில், கட்சி என்பதே தேர்தல் நலன்தான். தேர்தல் நலனை முன்னிறுத்தும் எவராலும் இந்த விடயத்தை முன்னெடுக்க முடியாது. உண்மையில், இதனை சிவில் சமூக பரப்பிலுள்ள புத்திஜீவிகள்தான் முன்னெடுக்க வேண்டும். அப்போதுதான் இந்த விடயத்தில் ஒரு நேர்மையான அணுகுமுறையை எதிர்பார்க்க முடியும்.

# ஜனாதிபதியின் உரைமீது அஸ்கிரிய பீடாதிபதியின் சூசகமான விமர்சனம்!



- அலசுவது **இராஜதந்திரி** -

அபயராம விகாராதிபதி முருத்தெட்டுவே ஆனந்த தேரர், ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷ கடந்த வாரம் நாட்டு மக்களுக்கு தமது வாசஸ்தலத்திலிருந்து ஆற்றிய உரையை கடுமையாக சாடியிருந்தார். நாட்டு நலனை முதன்மைப்படுத்தியதாகவோ அல்லது நாட்டு மக்கள் எதிர்கொண்டுள்ள பிரச்னைகளை அணுகியதாகவோ ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் உரை காணப்பட்டிருக்கவில்லை. வெறுமனே ஓர் அரசியல் மேடைப்பேச்சு போலவே நாட்டு மக்களுக்கான அவரின் தொலைக்காட்சி உரை அமைந்திருந்ததென்பது பொதுவான அபிப்பிராயமக இருக்கின்றது.

இந்தப் பொது அபிப்பிராயத்துக்கு வலுச்சேர்ப்பது போலவே கண்டியிலுள்ள மல்வத்தை, மற்றும் அஸ்கிரிய பௌத்த உயர் பீடங்களை சேர்ந்த பீடாதிபதிகள் ஜனாதிபதியிடம் அவரின் நாட்டு மக்களுக்கான உரை குறித்து தமது அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளனர். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று முன்தினம் கண்டிக்குச் சென்று அஸ்கிரிய, மல்வத்த பௌத்த உயர் பீடங்களின் பீடாதிபதிகளைச் சந்தித்திருந்தார்.

**நாட்டு மக்கள் செய்வதறியாத நிலை**

பௌத்த மத உயர் பீடத்தின் பீடாதிபதிகளை ஜனாதிபதி சந்திப்பதற்கு முன்பதாக கொழும்பில் பல்வேறு விடயங்கள் நாட்டு மக்களை செய்வதறியாத நிலைக்கு உட்படுத்தியிருந்தன. அவற்றில் எரிபொருள் விலையேற்றம், அதனைத் தொடர்ந்து விலைவாசி உயர்வு மற்றும் மரணதண்டனைக் கைதியான முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவின் விடுதலை உட்பட தொடர்ச்சியான பயணக்கட்டுப்பாடுடன் கூடிய கோவிட் -19 கட்டுப்பாடுகள் என்பவை முக்கியமானவையாக விளங்கியிருந்தன.

நாட்டு நிலவரம் உள்நாட்டு நெருக்கடிகள் மற்றும் சீனாவின் தலையீடு என்பவை காரணமாக குழம்பிப் போயுள்ள நிலையில் கோவிட்-19 வியாதிகூட நாட்டின் மோசமான அரசியல், சமூக, பொருளாதார நிலவரங்களை மேலும் மோசமாக்கி விடுவதாக இருக்கின்றது.

**மக்கள் மீதான அழுத்தங்கள்**

நாட்டு மக்கள் தொடர்ச்சியான பொருளாதார அழுத்தங்களுக்கும் அரசியல் அழுத்தங்களுக்கும் உட்பட்டிருக்கின்றார்கள். இந்த நிலையில் சட்டம் ஒழுங்கு என்பவைகூட மரண தண்டனை கைதி துமிந்த சில்வாவின் விடுதலையையடுத்து கேள்விக்குறியாகியுள்ளது.

இவற்றின் பின்னணியில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டு மக்களுக்கு கடந்தவாரம் ஆற்றிய உரை “சும்மா கிடந்த சங்கை ஊதிக்கெடுத்த” நிலையே ஏற்படுத்தி விட்டுள்ளது.

இலங்கையின் பொருளாதாரத்தை எவ்வாறு மீட்டெடுக்க முடியும் மற்றும் கோவிட்-19 சூழ்நிலை தொடர்ந்து அச்சுறுத்துமேயானால் அதனை கையாள்வதற்கான மாற்றுவழித்திட்டங்கள் உட்பட கடந்த ஒரு வருடகாலமாக நாட்டில் பாடசாலைக் கல்வி, பல்கலைக்கழகக் கல்வி என்பவை பாதிக்கப்பட்டுள்ளமையை எவ்வாறு மறுசீரமைப்பது பற்றி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தமது உரையில் எதனையும் அழுத்தம் திருத்தமாக குறிப்பிடவில்லையென்பதே அஸ்கிரிய மகாநாயக்க தேரர் வண. அநுநாயக்க மெதகம தம்மானந்தவின் ஆதங்கமாக இருக்கின்றது.

**பௌத்த மத பீடங்களின் ஆளுமை**

இலங்கையின் பௌத்தமத விவகாரங்களில் மட்டுமல்லாது, அரசியல், சமூக, பொருளாதார விடயங்களில்கூட பௌத்த உயர் பீடங்களின் பார்வை விரிவானதாகவே இருக்கின்றது. இதன்காரணமாகவே நாட்டின் தலைவர்கள், அரசியல் கட்சித்தலைவர்கள் அமைச்சர்கள் மற்றும் உயர் பதவிகளில் இருப்போர் பௌத்தமத பீடாதிபதிகள்மீது பயபக்தியோடு நடப்பதுடன் அவர்களின் ஆலோசனைகளுக்கும் செவிமடுப்பவர்களாக இருக்கின்றனர்.


அஸ்கிரிய பீடத்தலைவர் வண. அநுநாயக்க மெதகம தம்மானந்த தேரர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் நாட்டின் உண்மை நிலவரம் பற்றி எடுத்துக்கூறி சீர்திருத்த நடவடிக்கைகள் சம்பந்தமாக மீளவும் நாட்டு மக்களுக்காக ஒரு உரையை தொலைக்காட்சி வாயிலாக வழங்கும்படி கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்தக் கோரிக்கை இலங்கையின் அரச தலைவர் ஒருவரிடம் பௌத்த மகாசங்க பீடாதிபதியொருவரால் முதல் தடவையாக விடுக்கப்பட்ட கோரிக்கையாக இருக்கின்றது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் நாட்டுமக்களுக்கான கடந்தவார உரை குறித்து பலதரப்பட்ட விமர்சனங்கள் பலதரப்பட்ட கோணங்களில் வெளிவந்தவண்ணமுள்ளன.

இந்த நிலையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டு மக்களுக்கு ஆற்றிய தொலைக்காட்சி உரையின் மூலம் தமது தவறுகளைத் தாமே வெளிப்படுத்தியுள்ளதையே அஸ்கிரிய பீடாதிபதி வெளியிட்டுள்ள விமர்சனம் சுட்டிக்காட்டியுள்ளது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தமது உரையை மாத்திரமல்ல. தனது அரச நிர்வாகத்தின் கொள்கைகளைக்கூட திருத்தியமைக்க வேண்டியதன் அவசியத்தையே அஸ்கிரிய பீடாதிபதியின் விமர்சனம் சூசகமாக சுட்டி நிற்கின்றது.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
பிள்ளைகளுடன் மனஸ்தாபம் ஏற்படாமல் கவனமாக இருங்கள். மன நிறைவுடன் மற்றவர்க்கு நன்மை ஒன்றைச் செய்வீர்கள். இத்தனை நாள் உதவியவர்கள் ஒத்துழைக்காமல் விலகக்கூடும்.

**இடபம்**
சாதுர்யமாய் நடந்து பிறருக்கு நன்மை ஏற்படுத்துவீர்கள். மற்றவருக்கு உதவி செய்து பாராட்டுப் பெறுவீர்கள். நீண்டகாலத் தடைகள் ஒரு வழியாக அகலும்.

**மிதுனம்**
வாழ்வில் சிறியதொரு மகிழ்ச்சிகரமான திருப்பம் ஏற்படும். எதிரிகளை வெல்வீர்கள். எதிர்பார்ப்பு ஒன்று நிறைவேறும். உங்கள் கௌரவத்தைக் குலைக்கும் செயலை செய்ய வேண்டாம்.

**கடகம்**
ஒவ்வொரு விஷயத்திலும் கவனமாக இருப்பது நல்லது. தந்தையின் ஆதரவு கிடைக்கும். உழைப்பின் மூலமே நன்மை வரும். வீடு களைகட்டும். ஜீரண உறுப்பில் சிறிய சிரமம் உண்டாகும்.

**சிம்மம்**
நண்பர்கள், உறவினர்களால் அனுகூலம் உண்டு. சேமிப்பு கூடும். மகிழும்படியான சிறு சிறு வெற்றிகள் உண்டு. கோபத்தைக் கட்டுப்படுத்துங்கள். நல்லபெயர் எடுக்கும்படியான செயல் செய்வீர்கள்.

**கன்னி**
பணப் பிரச்னை ஓரளவுக்கு குறைந்து நிம்மதி வரும். உறவினர்களின் உதவியால் சிரமங்களில் இருந்து மீளுவீர்கள். புதிய விஷயம் ஒன்றைச் சாதிப்பீர்கள். உற்சாகம் கூடும்.

**துலாம்**
எதிர்காலத்திட்டம் பற்றிய சிறு ஏமாற்றம் ஒன்று ஏற்படும். சிறு விஷயம் ஒன்றில் வெற்றி காண்பீர்கள். மகிழ்ச்சி கூடும். நீண்ட நாளாக இழுபறியாக இருந்த விஷயம் முடியும்.

**விருட்சிகம்**
உழைப்புக்கு அங்கீகாரம் கிடைக்கும். மனம் அமைதியுறும். உறவினர்களிடம் இருந்து வரும் செய்தி பரபரப்பளிக்கும். மெனக்கெட்டு ஈடுபட்டு எதையும் செய்வதால் புகழ் கிடைக்கும்.

**தனுசு**
வெகு காலம் எதிர்பார்த்த சம்பள உயர்வு சற்றுத் தள்ளிப்போகும். அரசாங்கத்தால் சிறு நன்மை ஒன்றை அடைவீர்கள். வேண்டுதல்களை நிறைவேற்றுவதில் தாமதம் ஏற்படும்.

**மகரம்**
பிரச்னை ஒன்றை நல்லவர் உதவியுடன் சரி செய்வீர்கள். மனம் அமைதியுறும். பணப்புழக்கம் எதிர்பார்த்த அளவு இருக்காது. தாமதமான விஷயங்கள் இன்று நல்லபடியாக முடியும்.

**கும்பம்**
சகோதர, சகோதரிகளுடன் ஒற்றுமை மேம்படக் காண்பீர்கள். நேற்றிருந்ததைவிட உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். பிரச்னைக்கு தீர்வு கிடைக்கும். சுபநிகழ்ச்சி பற்றிய செய்தி வரும்.

**மீனம்**
பெரிய முயற்சி ஒன்றில் வெற்றி அடைவதற்கான அறிகுறி தென்படும். சிறு செலவு ஒன்று உண்டாகும். மனதில் நிறைவு வரும். இடைவிடாத உழைப்பும், முயற்சியும் புதிய வெற்றி வாய்ப்பு தரும்.

# பேரறிவாளனின் 'பரோல்' மேலும் ஒரு மாதம் நீடிப்பு

சென்னை, ஜூன் 29

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சிறைத் தண்டனை பெற்றுள்ள பேரறிவாளனுக்கு வழங்கப்பட்ட பரோல் மேலும் ஒரு மாதம் நீடிப்பு செய்து தமிழக அரசு நேற்று உத்தரவிட்டுள்ளது.



பேரறிவாளன் அடிக்கடி உடல்நிலை சரியில்லாமல் பாதிக்கப்பட்டு வந்தார். இதையடுத்து அவருக்கு 30 நாள்கள் பரோல் வழங்க வேண்டும் என்று அவரின் தாயார் அற்புதம்மாள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு கோரிக்கை வைத்திருந்தார். இதையடுத்து பேரறிவாளனுக்கு ஒரு மாதம் பரோல் வழங்கப்பட்டது. கடந்த மே 28 ஆம் திகதி சென்னை புழல் சிறையில் இருந்து பரோல் விடுப்புக்காக விடுவிக்கப்பட்டார்.

இதனிடையே கடந்த 19 ஆம் திகதி, பேரறிவாளனுக்கு சிகிச்சை நடைபெற்று வருகிறது. சிகிச்சை தொடர்ச்சியாக அளித்தால் தான் நன்மை என மருத்துவர்கள் கூறுவதால் மேலும் ஒரு மாதம் பரோல் நீட்டிப்பு செய்ய வேண்டும் என அவரது தாயார் அற்புதம்மாள் முதலமைச்சருக்கு கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்த கோரிக்கையை ஏற்று பேரறிவாளனுக்கு வழங்கப்பட்ட பரோலை மேலும் ஒரு மாதத்திற்கு நீட்டித்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. ஏற்கனவே ஒரு மாதம் பரோல் வழங்கப்பட்டிருந்த நிலையில் மேலும் ஒரு மாதத்திற்கு பரோல் நீட்டிக்கப்பட்டுள்ளது.

# அ.தி.மு.க. தலைமை பொறுப்பை ஏற்குமாறு சசிகலாவுக்கு அழைப்பு

## தூத்துக்குடி மாவட்ட அ.தி.மு.க. கூட்டத்தில் தீர்மானம்

தூத்துக்குடி, ஜூன் 29

அ.தி.மு.கவுக்கு தலைமையேற்க சசிகலாவுக்கு அழைப்பு விடுத்து தூத்துக்குடி வடக்கு மாவட்ட அ.தி.மு.க. நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. சசிகலாவுடன் தொலைபேசியில் உரையாடியவர்களை கட்சியில் இருந்து நீக்கியதற்கு இந்தக் கூட்டத்தில் கண்டனமும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இதேவேளை, மூத்த கவிஞர் புலமைப்பித்தன், சசிகலாவுக்கு ஆதரவாகக் கருத்து வெளியிட்டுள்ளார்.

தற்போதைய கொரோனா கால முடக்கல் முடிந்ததும் தொண்டர்களை சந்திக்க மாவட்ட வாரியாக சுற்றுப்பயணம் மேற்கொள்ள உள்ளாரென அவர் தெரிவித்து பரபரப்பை ஏற்படுத்தியுள்ளார்.

தி.முகவில் இருந்து எம்.ஜி.ஆர். நீக்கப்பட்டபோது, அவர் அதிமுக கட்சி தொடங்கிய காலத்தில் எம்.ஜி.ஆரின் தீவிர ஆதரவாளராக கவிஞர் புலமைப்பித்தன் செயல்பட்டார். இப்போது, அவர் சசிகலாவுக்கு ஆதரவாகக் கருத்து வெளியிட்டுள்ளார்.

இதேவேளை, அ.தி.மு.க. ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வத்தின் மாவட்டமான தேனியைச் சேர்ந்த அ.தி.மு.க. தொண்டர் ஒருவரிடம் தொலைபேசியில் பேசிய சசிகலா, அ.தி.மு.க. தலைமை சுயநலமாக இருப்பதாக கடுமையாக விமர்சித்தார். சசிகலா தொலைபேசியில் பேசிய ஒலிப்பதிவு சமூக ஊடகங்களில் வெளியாகி வைரலாக பரவியது. ஏற்கனவே சசிகலாவுடன் பேசிய பலர் கட்சியிலிருந்து நிறுத்தப்பட்டுள்ளார்கள்.

# மாநிலங்களவையின் 3 இடங்களை கைப்பற்றுவதற்கு தி.மு.க. திட்டம்!

சென்னை, ஜூன் 29

மாநிலங்களவையில் காலியாக உள்ள தமிழகத்திற்கான 3 இடங்களுக்கு இடைத்தேர்தல் இன்னும் அறிவிக்கப்படாத நிலையில், இந்த 3 இடங்களையும் கைப்பற்றும் முயற்சியில் தி.மு.க. களமிறங்கியுள்ளது.

மாநிலங்களவையில் எம்பியாக இருந்த அ.தி.மு.கவை சேர்ந்த ஏ.முகமது ஜான் மார்ச் 23 அன்று மரணமடைந்த நிலையில், தமிழக சட்டசபை தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்ற கே.பி.முனுசாமி மற்றும் ஆர் வைத்திலிங்கம் ஆகியோர் தங்களின் மாநிலங்களவை எம்.பி. பதவிகளை இராஜினாமா செய்தனர். இதனால் தற்போது மாநிலங்களவையில் தமிழகத்திற்கான மூன்று இடங்கள் காலியாக உள்ளது.

இந்த காலி இடங்களுக்காக இடைத்தேர்தல் விரைவில் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில், சமீபத்தில், இந்த இடைத்தேர்தலை முன்கூட்டியே நடத்த வேண்டும் என்று தி.மு.க. இந்தியத் தேர்தல் ஆணையத்திடம் கோரிக்கை விடுத்தது. இது தொடர்பாக தி.மு.க. அளித்த கோரிக்கை மனுவில், தேர்தலின் தாமதம் தமிழகத்தை மாநிலங்களவையில் போதுமான அளவில் பிரதிநிதித்துவப்படுத்துவதைத் தடுக்கிறது என்றும், இது ஜனநாயகம் மற்றும் அரசியலமைப்புக்கு எதிரானது. இதனால் அரசியலமைப்பின் கீழ் மூன்று இடங்களுக்கும் தனித்தனியாக இடைத்தேர்தல்களை நடத்த வேண்டும் கூறப்பட்டிருந்தது.

இந்நிலையில், மாநிலங்களவை தொகுதிக்கு போட்டியிட தீவிரமாக முயற்சிகளை மேற்கொண்டு வரும் தி.மு.கவில், இரண்டாம் நிலை தலைவர்களில் இந்த பதவிக்காக தங்களை போட்டியிடும் சூழல் உருவாகியுள்ளது. இதில் தங்க தமிழ் செல்வனுக்கும் கார்த்திகேயா சிவசேநாதிபதி 2 இடங்களை ஒதுக்க உள்ளதாக கூறப்படுகிறது.



## வதிரி திருஇருதய கல்லூரியில் நேற்று தொலைக்கல்வி கற்றல் நிலையம் திறப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 29
கரவெட்டி கல்வி கோட்டத்துக்கு உட்பட்ட வதிரி திரு இருதயக் கல்லூரியில் இடர் கால நிகழ்நிலை தொலைக் கல்வி கற்றல்வள நிலையம் நேற்று திறந்து வைக்கப்பட்டது.
நேற்று யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதனால் இந்த கற்றல் மத்திய நிலையம் திறந்து வைக்கப்பட்டது.
இந்த நிகழ்வில் கரவெட்டி பிரதேச செயலாளர், கோட்டக் கல்வி பணிப்பாளர், பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

## பஸிலின் பாராளுமன்ற பிரவேசம் கட்சியின் உறுப்பினர்கள் சந்திப்பு

கொழும்பு, ஜூன் 29
ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பின்வரிசை பாராளுமன்ற உறுப்பினர்கள், நேற்று முன் தினம் மாலை கொழும்பில் சந்திப்பு ஒன்றை நடத்தியுள்ளனர்.
முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷவின் பாராளுமன்ற பிரவேசம் குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.
பாராளுமன்ற உறுப்பினர் பிரமித்த பண்டார தென்னக்கோனின், தெஹிவளையில் உள்ள இல்லத்தில் இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.
இதேவேளை, ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பிரதிநிதிகளுக்கும், முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷவுக்கும் இடையே சந்திப்பொன்று இடம்பெறவுள்ளதாக கட்சியின் உள்ளக தகவல்கள் தெரிவிக்கின்றன.
எதிர்வரும் 6ஆம் திகதியின் பின்னர் இந்த சந்திப்பு இடம்பெறக் கூடும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## போலி காசோலைகள் மூலம் 430 இலட்சம் ரூபாய் மோசடி!

கொழும்பு,ஜூன்,28
இலங்கையின் பிரபல இரும்பு தயாரிப்பு நிறுவனத்தின் வங்கிக் கணக்கிலிருந்து போலிக் காசோலைகள் மூலம் 430 இலட்சம் ரூபாய் பணத்தைப் பெற்று மோசடியில் ஈடுபட்ட சந்தேகநபர்கள் 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் பேச்சாளர் பதில் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.
இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-
கடந்த ஏப்ரல் 12 ஆம் திகதி தமிழ் - சிங்கள புத்தாண்டுக்கு முதல் நாள் இலங்கையில் பிரபல இரும்பு தயாரிப்பு தொழிற்சாலையின் வங்கிக் கணக்கில் 430 இலட்சம் ரூபா 7 நபர்களால் வெவ்வேறு இடங்களில் காசோலைகள் மூலம் பெறப்பட்டுள்ளன. தனியார் வங்கிக் கணக்கொன்றில் இந்தப் பணம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.
இந்த வங்கியில் வெவ்வேறு பிரதேசங்களிலுள்ள கிளை அலுவலகங்களில் போலியான காசோலைகள் ஊடாக பணம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. குறித்த கம்பி தயாரிப்பு நிறுவனத்தில் தொழில்புரியும் ஊழியர்களின் ஆடையை அணிந்து குறித்த சந்தேகநபர்கள் இவ்வாறு பணத்தைப் பெற்றுள்ளனர்.
இது தொடர்பில் குற்ற விசாரணைப் பிரிவினரால் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளுக்கமைய வங்கி அதிகாரி, குறித்த தொழிற்சாலையின் பணியாற்றும் ஊழியர் உள்ளிட்ட 6 சந்தேகநபர்கள் ஏற்கனவே கைது செய்யப்பட்டிருந்தனர்.
இந்நிலையில் நேற்று முன் தினம் இந்த மோசடியுடன் தொடர்புடைய பிறிதொரு சந்தேகநபரும் கைது செய்யப்பட்டுள்ளார்.
34 வயதுடைய குறித்த சந்தேகநபர் எம்பிலிப்பிட்டி - நவநகர் பிரதேசத்தைச் சேர்ந்த வராவார். இவரால் குறித்த கடந்த ஏப்ரல் 12 ஆம் திகதி கிரிபத்கொட பிரதேசத்திலுள்ள தனியார் வங்கியில் போலி காசோலையின் ஊடாக 130 இலட்சம் ரூபாய் பணம் பெற்றுக் கொள்ளப்பட்டமை விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது.
குற்ற விசாரணைப் பிரிவின் வணிக மற்றும் நிதி குற்றங்கள் தொடர்பான பிரிவினரால் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். இதனுடன் தொடர்புடைய மற்றொரு சந்தேகநபரும் சி.சி.ரி.வி. காணொலி உள்ளிட்டவற்றின் உதவியுடன் இனங்காணப்பட்டுள்ளார்.
அவை கைது செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்த மோசடி குறித்த விசாரணைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகிறது -என்றார்.

# இரட்டை குடியுரிமையை துறக்கவேண்டும் பஸில்!

### தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் வலியுறுத்து



கொழும்பு, ஜூன் 29
இரட்டை குடியுரிமை கொண்டவர்கள் அரசியலிலும், அரச நிர்வாகத்திலும் ஆதிக்கம் செலுத்துவது நாட்டுக்கு எதிரான செயல்பாடு என்றே கருதவேண்டும். பஸில் ராஜபக்ஷ நாட்டுக்கு சேவையாற்ற நினைத்தால் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை போன்று அமெரிக்கக் குடியுரிமையை துறக்கவேண்டும்.
தற்போதைய நிலையில் நாட்டை ஒருபோதும் முன்னேற்ற முடியாது என்றே தோன்றுகிறது என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் பெங்கமுவ நாலக தேரர் தெரிவித்தார்.
அவர் மேலும் குறிப்பிடுகையில்-
இரட்டைக் குடியுரிமை கொண்டவர்கள் அரச நிர்வாகத்திலும், அரசியலிலும் பங்குபற்றுவது தவறானதாகும். இரட்டைக் குடியுரிமை உடையவர்கள் அரசியலில் ஆதிக்கம் செலுத்துவது நாட்டுக்கு எதிராக செயல்பாடாகும்.
முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ பாராளுமன்ற உறுப்பினராகி நாட்டுக்கு சேவையாற்றுவது வரவேற்கத்தக்கது. ஆனால், நாட்டின் நலனை கருத்தில்கொண்டு இரட்டைக் குடியுரிமை உடையவருக்கு அரசியலில் அனுமதியளிக்க முடியாது.
மேலும், இரசாயன உரம் தடை செய்யப்பட்டமையினால் விவசாயிகள் பெரும் அசௌகரியங்களுக்குட்பட்டுள்ளார்கள். சேதன உர பாவனை வரவேற்கத்தக்கது. அதற்கு சிறந்த திட்டம் வகுக்கப்பட்டிருக்கவேண்டும். இரசாயன உரம் பாவனைக்கு பழகியிருந்த விவசாயிகளை சேதன பசளை பாவனைக்கு விரைவில் பழக்கப்படுத்த முடியாது. எவ்வித திட்டமிடலுமின்றிய வகையில் இரசாயன உரம் தடை செய்யப்பட்டமையினால் விவசாயிகள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இதனால், பெரும் விளைவை நாட்டு மக்கள் அனைவரும் எதிர்காலத்தில் எதிர்க்கொள்ள நேரிடும்.
இரசாயன உரம் பாவனை தடை மற்றும் சேதன பசளை பாவனை விடயத்தில் அரச தலைவர்கள் மற்றும் விவசாயத்துறை அமைச்சர் உரிய தரப்பினரின் ஆலோசனைகளை பெறவில்லை என்றே குறிப்பிட முடியும். அரசியல்வாதிகள் எடுக்கும் அனைத்து தீர்மானங்களும் நடைமுறையில் சாதகமாக அமையாது. ஆகவே, சிறுபோகத்திற்கு தேவையான இரசாயன உரத்தை விவசாயிகளுக்கு இம்முறை மாத்திரம் அரசாங்கம் வழங்கவேண்டும் - என்றார்.

## பைசர், மொடேர்னா தடுப்பூசிகள் இரு வாரத்துக்குள் இங்கு வரும்



கொழும்பு, ஜூன் 29
அவசரகால பயன்பாட்டிற்காக உலக சுகாதார அமைப்பால் அங்கீகரிக்கப்பட்ட மூன்று கொரோனா தடுப்பூசிகள் - இதுவரை இலங்கையில் பயன்படுத்தப்படாதவை. அடுத்த இரண்டு வாரங்களுக்குள் நாட்டுக்கு வரும் என ஔடதங்கள் உற்பத்தி, ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமண தெரிவித்தார்.
ஜூலை இரண்டாவது வாரத்துக்குள், 60 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் கோவிட் -19 தடுப்பூசியின் குறைந்தபட்சம் ஒரு டோஸ் வழங்குவதை அரசாங்கம் நோக்கமாகக் கொண்டுள்ளது என்றும் அவர் கூறினார்.
அமெரிக்காவில் தயாரிக்கப்படும் பைசர் மற்றும் மொடர்னா தடுப்பூசிகள் மற்றும் சீனா தயாரித்த சினோவா தடுப்பூசி ஆகியவை நாட்டுக்கு வர உள்ளன.
இதற்கிடையில், மொடேர்னா தடுப்பூசியின் 10 இலட்சம் டோஸ் இலங்கைக்கு வழங்கப்படும் என்று உலக சுகாதார அமைப்பு உறுதிப்படுத்தியுள்ளது.

## தன்சல் சோறு சாப்பிட்ட 9 பேருக்கு கொரோனா

கொழும்பு, ஜூன் 29
அநுராதபுரம் கஹடகஸ்கிகிலிய கட்டுகொலியாவ பகுதியில் நடத்தப்பட்ட தன்சலில் பங்கேற்ற 09 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப் பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
இதனையடுத்து, அப்பகுதியில் வசிக்கும் 36 குடும்பங்களைச் சேர்ந்த நபர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என அந்த பிரதேசத்தின் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தெரிவித்துள்ளார்.
பொசன் போயா தினத்தில், தனி மைப்படுத்தல் சட்டத்தை மீறி இவ்வாறு தன்சல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறினர்.

# தடுப்பூசிகள் போடப்பட்டால் ஜூலையில் பாடசாலை திறப்பு!

கொழும்பு, ஜூன் 29
மாணவர்களுக்கு உடனடியாக தடுப்பூசி வழங்கி பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கு கல்வி அமைச்சு அவதானம் செலுத்தியுள்ளதாக அமைச்சின் செயலாளர் கபில பெரேரா தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்-
7 இலட்சம் தடுப்பூசிகளை, 11, 12 மற்றும் 13ஆம் வகுப்பு மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ளன என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.
பாடசாலை ஆரம்பிப்பதற்கு முன்னர் அனைத்து ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை ஊழியர்கள் அனைவருக்கும் இந்த தடுப்பூசி வழங்கப்படவுள்ளது. அவ்வாறான ஊழியர்கள் 2 இலட்சத்து 79 ஆயிரம் பேர் வரையில் உள்ளனர்.
வெகுவிரைவில் தடுப்பூசிகளை வழங்கி விட்டால் ஜூலை மாதம் பாடசாலைகள் ஆரம்பிக்க முடியும். எப்படியிருப்பினும் திகதியை தற்போது கூற முடியாத நிலைமைகள் உள்ளது.
இரண்டு தடுப்பூசிகளையும் வழங்க முடியாதென்றாலும் ஒரு தடுப்பூசி வழங்கியாவது பாடசாலைகள் ஆரம்பிக்கப்படும். தற்போது திகதி குறிப்பிடப்பட்டுள்ள புலமைபரிசில் பரீட்சை, சாதாரண தர பரீட்சை மற்றும் உயர்தரபரீட்சைகளை பிற்போடுவதற்கு எந்தத் தீர்மானங்களும் மேற்கொள்ளப்படவில்லை.
எதிர்வரும் நாட்களில் ஏற்படும் நிலைமைகளை கருத்தில் கொண்டு இந்த விடயம் தொடர்பில் தீர்மானங்கள் எடுக்கப்படும் - என்றார்.

# புதிய அரசியல் கலாசாரத்தை நாட்டில் ஸ்தாபிக்கவேண்டும்!

## ஐ.தே.க. தலைவர் ரணில் அழைப்பு



**கொழும்பு, ஜூன் 29**

**நாட்டில் ஒரு புதிய அரசியல் கலாசாரத்தை ஸ்தாபிக்க வேண்டும் என முன்னாள் பிரதமரும் ஐ.தே.கவின் தலைவருமான ரணில் விக்ரமசிங்க அழைப்பு விடுத்துள்ளார்.**

சிலரின் பொறுப்பற்ற செயற்பாடுகளினால் பொதுமக்கள் அரசியல்வாதிகள் இல்லாத ஒரு நாட்டை கோருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கட்சியின் தலைமையகத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த அவர், கட்சிகளை மாற்றும்போது மாறாத நீண்ட கால தேசிய கொள்கைக் கட்டமைப்பை உருவாக்கவேண்டும் என கூறினார்.

ஐக்கிய மக்கள் சக்தியை ஆதரித்தமை காரணமாக நகராட்சி மன்றங்கள், நகர சபைகள் மற்றும் பிரதேச சபைகளின் 69 உறுப்பினர்கள் அண்மையில் கட்சியில் இருந்து நீக்கப்பட்டனர்.

இந்நிலையில் அவர்களுக்குப் பதிலாக நேற்று புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட நிறுவனங்கள் மன்றில் மேன்முறையீடு!

## மக்களுக்காக வாதாட சுமந்திரன் தயார்



கிளிநொச்சி, ஜூன் 29

கௌதாரிமுனை சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட நிறுவனங்கள் மேன்முறையீடு செய்துள்ளன எனவும், மக்கள் சார்பில் முன்னிலையாகி தீர்வு பெற் றுக்கொடுப்போம் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கௌதாரிமுனை பகுதியில் சட்டவிரோத மணலகழ்வு தொடர்பில் மேன்முறையீட்டு வழக்குக்கான அழைப்பு கிடைத்த 11 பேரையும் நேற்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சந்தித்து கலந்துரையாடினர்.

அந்த பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்டிருந்த நிறுவனங்களுக்கு எதிராக இரவு பகலாக போராட்டத்தில் ஈடுபட்டிருந்த பெண்கள் பிரதேசத்தின் பாதுகாப்பு கருதி நீதிமன்றம் வரை சென்றனர். இதன்போது கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் பிரதேசத்தின் பாதுகாப்புக்கு சார்பாகவும், பொது மக்களுக்கு சார்பாகவும் தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் குறித்த வழக்கில் திருப்தி அடையாத நிறுவனத்தினர் வழங்கப்பட்ட தீர்ப்பை மீளாய்வு செய்யுமாறு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் மீளாய்வு மனுவொன்றை தாக்கல் செய்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் பிரதேச மக்கள் சார்பில் அழைக்கப்பட்டுள்ள 11 பேரையும் பாராளுமன்ற உறுப்பினர்களான எம்ஏசுமந்திரன், எஸ்.சிறிதரன் ஆகியோர் சந்தித்து கலந்துரையாடினர்.

அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த எம்.ஏ. சுமந்திரன்-

இந்த பிரதேசத்தில் சட்டவிரோதமாக மணல் அகழ்வு மேற்கொண்ட நிறுவனத்துக்கு எதிராக பிரதேச மக்கள் விசேடமாக பெண்கள் ஆர்ப்பாட்டம் செய்து அதனை தடுத்து நிறுத்தி நீதிமன்றத்துக்கு கொண்டு சென்றிருந்தார்கள்.

அந்த நீதிமன்ற வழக்கில் ஊருக்கு சார்பாகவும், நிறுவனத்துக்கு எதிராகவும் தீர்ப்பு வந்தது. அது மாபெரும் வெற்றி. மக்களுக்கான வெற்றி. ஆனால், அந்த தீர்ப் புக்கு எதிராக அந்த நிறுவனங்கள் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றிலே மீளாய்வு மனுவொன்றை சமர்ப் பித்திருக்கின்றார்கள். அந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும்போது மக்கள் சார்பில் நாங்கள் முன்னிலையாகி, நீதியை பெற்றுக் கொடுப்போம் - என்றார்.

# பால்மா விலை அதிகரிப்புக்கு அனுமதி வழங்க மறுத்த பந்துல



கொழும்பு, ஜூன் 29

இறக்குமதி செய்யப்பட்ட பால்மாவின்விலை உயர்வுக்கு அனுமதி வழங்குவதற்கான வாய்ப்பை வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன நிராகரித்துள்ளார்.

ஏனெனில் இது தொற்று நோயால் பாதிக்கப்பட்ட மக்களின் சுமையை அதிகரிக்கும் என அவர் தெரிவித்துள்ளார்.

பால்மாவின் விலை உயர்வுக்கு அனுமதி வழங்கப்படாவிட்டால் உள்ளூர் சந்தையில் பால் மாவுக்கு பற்றாக்குறை ஏற்படக்கூடும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டது. இருப்பினும் மக்கள் ஏற்கனவே சிரமங்களைத் தாங்க வேண்டியிருந்தது. இந்த நேரத்தில் சமு தாயத்தின் நலன் கருதி செயற்படவேண்டுமென பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.



# மரண தண்டனைக் கைதிகள் தொடர்ந்தும் உண்ணாவிரதம்

கொழும்பு, ஜூன் 29

வெலிக்கடை, மஹர மற்றும் பூஸா சிறைகளில் மரண தண்டனை கைதிகள் தொடர்ந்து நேற்றும் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வெலிக்கடை சிறைச்சாலையில் உள்ள ஒரு கட்டடத்தின் மீது ஏறி 10 கைதிகள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர் என்றும், மேலும் 150 கைதிகள் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், மஹர சிறையில் 70 கைதிகள் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளனர் என்றும் ஒரு கைதி பூஸா சிறைச்சாலையில் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளார் என்றும் சிறைச்சாலைகள் ஆணையாளர் சந்தன எக்கநாயக்க தெரிவித்தார்.

போராட்டத்தில் ஈடுபடும் கைதிகள் பொது மன்னிப்பு வழங்குவதற்கான அரசாங்கத்தின் திட்டத்தில் இணைத்துக்கொள்ளப்படமாட்டார்கள் என சிறைச்சாலைகள் திணைக்களம் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பஸிலின் பாராளுமன்ற வருகைக்கு 40 பின்வரிசை எம்.பிக்கள் இணக்கம்

கொழும்பு, ஜூன் 29

பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ பாராளுமன்ற உறுப்பினராகப் பதவி ஏற்கவேண்டும் என ஜனாதிபதி மற்றும் பிரதமர் குறிப்பிட்டுள்ளனர். பஸில் ராஜபக்ஷவின் பாராளுமன்ற வருகைக்கு ஆளும் கட்சியின் பின்வரிசை உறுப்பினர்களில் 40 இற்கும் அதிகமானோர் இணக்கம் தெரிவித்துள்ளார்கள். அனைத்து தரப்பினரின் கோரிக்கைக்கமைய பஸில் விரைவில் பாராளுமன்ற உறுப்பினராக பதவி ஏற்பார் என எதிர்பார்க்கிறோம் என பாராளுமன்ற உறுப்பினர் பிரமித்த பண்டார தென்னக்கோன் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷவின் பாராளுமன்ற வருகையானது, அரசாங்கத்தின் பொருளாதார நடவடிக்கைகளுக்கு பலமாக அமையும். பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் பொருளாதாரம் மற்றும் தேசிய உற்பத்திகளை மேம்படுத்த அவர் அர்ப்பணிப்புடன் செயற்பட்டார்.

பாராளுமன்றுக்கு வருகை தந்து அமைச்சுப் பதவியை பொறுப்பேற்குமாறு ஜனாதிபதி மற்றும் பிரதமர் அவரிடம் பல முறை குறிப்பிட்டுள்ளனர். ஆனால் அவர் இதுவரையில் அவ்விடயம் குறித்து உரிய தீர்மானத்தை எடுக்கவில்லை.

பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர்பஸில்பாராளுமன்றுக்கு வர வேண்டும் என 40ற்கும் அதிகமான பொதுஜன பெரமுனவின் பின்வரிசை பாராளுமன்ற உறுப்பினர்கள் இணக்கம் தெரிவித்து அதனை எழுத்து மூலமாக அவர்கள் அறிவித்துள்ளார்கள்-என்றார்.

# மத்திய அதிவேக நெடுஞ்சாலையில் வாகனங்களை செலுத்தவேண்டாம்

கொழும்பு, ஜூன் 29

தற்போது நிர்மாணிக்கப்பட்டு வரும் மத்திய அதிவேக நெடுஞ்சாலையில் வாகனங்களை செலுத்துவதை தவிர்த்துக் கொள்ளுமாறு வீதி அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இவ்வாறு வாகனங்களை செலுத்துவது சட்டவிரோத செயற்பாடாகும் எனவும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் எல்.வி.டி. எஸ் வீரகோன் தெரிவித்துள்ளார்.

குறித்த செயல்பாடுகளில் ஈடுபடுவோருக்கு நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். பாதையின் நிர்மாணப் பணி காரணமாக அங்கு அடிக்கடி கனரக வாகனங்கள் செல்வதனால் விபத்துக்கள் இடம்பெற வாய்ப்பு இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# சுகாதார விதிமுறைகள் மீறிய 625 இடங்கள் சுற்றிவளைப்பு

கொழும்பு, ஜூன் 29

மேல் மாகாணத்தில், சுகாதார விதிமுறைகளை மீறி திறக்கப்பட்டிருந்த சூதாட்ட விடுதிகள், இரவுநேர களியாட்ட விடுதிகள், பந்தய மையங்கள் உள்ளிட்ட 625 இடங்கள் சுற்றிவளைக்கப்பட்டுள்ளன.

மேல் மாகாணத்துக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனின் ஆலோசனைக்கமைய இந்த சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டது. இதன்போது 247 பேருக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டது. அத்துடன், 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக மேல் மாகாணத் திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

# யாழ். மாநகர முதல்வருக்கு எதிராக முறைப்பாடு!

யாழ்ப்பாணம், ஜூன் 29

யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் வி. மணிவண்ணனுக்கு எதிராக வடக்கு மாகாண உள்ளூராட்சி திணைக்களத்தில் நேற்று முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 25 ஆம் திகதி இடம்பெற்ற யாழ். மாநகர சபை அமர்வில் உறுப்பினர் வ.பார்தீபனை நோக்கி "நாய்" என விளித்து பேசினார் என்பதற்காக மற்றோர் உறுப்பினரான ஜெ.ரஜீவ்காந்துக்கு ஒரு மாத காலம் அமர்வுகளில் பங்கேற்கத் தடை விதிக்கப்பட்டது.

இந்தத் தடை சட்டத்துக்கு முரணானது என்று தெரிவித்தே உள்ளூராட்சி திணைக்களத்தில் அவர் முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்துள்ளார். (ஐ)

# சாதகமான அறிவிப்பொன்றை விரைவில் விடுப்பார் பஸில்!

## பெரமுனவின் பொதுச் செயலர் கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 29

"பாராளுமன்றம் வருமாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உட்பட பல தரப்பினரும் பஸில் ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். அக் கோரிக் கையை அவர் நிராகரிக்கவில்லை. எனவே, சாதகமான அறி விப்பை விரைவில் விடுப்பார்." _ என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் எம்.பி. தெரிவித்தார்.



பஸில் ராஜபக்ஷவின் பாராளுமன்ற வருகை தொடர்பில் நேற்று எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

"பஸில் ராஜபக்ஷ அரசியல் ரீதியாகவும் பலம் பொருந்திய நபர். பழமையான ஐந்து கட்சிகளை பின்னுக்கு தள்ளிவிட்டு மொட்டுக் கட்சியை முதலிடத்துக்கு கொண்டுவந்தார். குறுகிய காலப்பகுதியில் ஆட்சியை பிடித்ததுடன், எமது கட்சியிலிருந்து ஜனாதிபதியும் உருவாகினார். எனவே, அவ்வாறானதொரு நபர் பாராளுமன்றம் வருவதற்கு பிரத்தியேக பிரசாரம் தேவையில்லை. அவர் நிச்சயம் வரவேண்டும்." - என்றார் சாகர.

# மைத்திரிபாலவுக்கும் அமைச்சு பதவி?

கொழும்பு, ஜூன் 29

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சராக பதவியேற்கவுள்ளார் என வெளியான தகவலை அவரின் ஊடகப்பிரிவு நிராகரித்துள்ளது.

பஸில் ராஜபக்ஷ அமைச்சராக நியமிக்கப்படவுள்ள நிலையில், மைத்திரிபால சிறிசேனவுக்கும் அமைச்சு பதவி வழங்கப்படவுள்ளது எனவும், அவர் சுற்றாடல்துறை அமைச்சுப் பதவியை கோரியுள்ளார் எனவும் தகவல் வெளியாகியிருந்தது.

இந்நிலையிலேயே அந்தத் தகவலை நிராகரித்து, எந்தவொரு பதவியையும் மைத்திரிபால சிறிசேன கோரவில்லை என அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

# நாட்டில் டெல்டா தொற்றுடன் மேலும் ஒருவர் அடையாளம்

கொழும்பு, ஜூன் 29

கஹதுடுவ-ஜயலியகம பகுதியில் டெல்டா வைரஸ் தொற்றுக்குள்ளான ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளார் என கஹதுடுவ சுகாதார வைத்திய அதிகாரி தனுக்க பத்மராஜ தெரிவித்துள்ளார்.

47 வயதான குறித்த நபர், கொழும்பு-கொம்பனிதெரு பகுதியிலுள்ள நிர்மாணத்துறை அலுவலகமொன்றில் பணியாற்றியுள்ளார்.

இவ்வாறு அடையாளம் காணப்பட்ட நபர், பொலநறுவை கொரோனா சிகிச்சை நிலையத்தில் சிகிச்சை பெற்று வருகிறாரென அவர் தெரிவித்தார்.

குறித்த நபரின் மனைவி, மகன் உள்ளிட்ட 50 குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என்றும் அந்த பிரதேசம் தனிமைப்படுத்தப் பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்நிலையில் தொற்றுக்குள்ளான நபர் பணியாற்றிய நிறுவனத்திலிருந்து, இந்த வைரஸ் பரவியிருக்கக்கூடும் என சந்தேகிப்பதாகவும் கஹதுடுவ சுகாதார மருத்துவ அதிகாரி குறிப்பிட்டார்.

# கௌதாரிமுனை மணல் திட்டினால் மக்களின் போக்குவரத்து பாதிப்பு!

## உடன் சீர் செய்ய பிரதேச சபை நடவடிக்கை

கிளிநொச்சி, ஜூன் 29

பூநகரி, கௌதாரிமுனையில் அமைந்துள்ள மணல் திட்டினால் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ள நிலையில் அதனை சீர்செய்வதற்கான அனுமதியை கனியவளத் திணைக்களம் இழுத்தடிப்பதால் கிராமத்துக்குள்ளேயே மணலை விற்பனை செய்து பிரதேச சபைக்கு நிதியை பெற்றுக்கொள்ளவுள்ளதாக பூநகரி பிரதேச சபைத் தவிசாளர் ஐயம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

நேற்று கள விஜயம் மேற்கொண்டு நிலைமைகளை பார்வையிட்ட குழுவினர் இந்த பிரச்னைக்கு ஒரு வாரத்துக்குள் தீர்வு எட்டப்படவுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கௌதாரிமுனை கிராமத்தில் இயற்கையாக காணப்படும் மணல் திட்டு சரிந்து போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. அந்த கிராமத்துக்கான ஒரேயொரு போக்குவரத்து பாதையாக காணப்படும் குறித்த வீதியில் மணல் திட்டு காணப்படுகின்றது. இந்த மணல் திட்டு வருடம் தோறும் சரிந்து போக்குவரத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தி வருவதாக பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

இந்த நிலையில் 2 வருடமாக இந்த மணல் திட்டு சரிந்து விழுந்துள்ள நிலையில் அதனை அகற்றுவதற்கு திணைக்களங்கள் நடவடிக்கை எடுக்கவில்லை எனவும், பூநகரி பிரதேச சபையிடம் பல தடவைகள் கோரிய போதிலும், அவர்கள் இழுத்தடிப்பு செய்ததாகவும் பிரதேச மக்களால் குற்றம் சாட்டப்பட்டது.

இந்த நிலையில் பிரதேச மக்களின் தனிநபர் வருமானத்திலிருந்து நிதி சேகரிக்கப்பட்டு கனரக இயந்திரம் கொண்டு போக்குவரத்து மேற்கொள்ளக்கூடிய வகையில் மணல் கடல் பகுதிக்குள் தள்ளி விடப்பட்டதாகவும், தற்போது ஏற்பட்டுள்ள காற்றினால் மீண்டும் மணல் திட்டு அதிகரித்து சரிந்து விழுந்து போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதாகவும் மக்கள் குறிப்பிடுகின்றனர்.

அந்த பகுதிக்கு நேற்று சென்ற பூநகரி பிரதேச சபையின் தவிசாளர், செயலாளர் மற்றும் வருமானவரி பரிசோதகர் உள்ளிட்ட குழுவினர் பகுதியை ஆராய்ந்தனர்.

அந்த மணல் திட்டை அகற்றுவதற்கு தாம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டதாக பிரதேச சபைத் தவிசாளர் தெரிவித்தார்.

மணல் திட்டை அகற்றி பிரதேசத்தின் போக்குவரத்தை சீர் செய்வதற்கும், அதன் ஊடாக பிரதேச சபைக்கு வருவாய் ஒன்றை திரட்டுவதற்கும் பல்வேறு முயற்சிகளை தாம் மேற்கொண்டதாகவும், அதற்கு மாவட்ட அரசாங்க அதிபர் உள்ளிட்ட அதிகாரிகள் அனுமதி வழங்கியுள்ளபோதிலும், கனியவளத் திணைக்களம் இழுத்தடிப்பு செய்து வருவதாலேயே இவ்வாறான நிலை தொடர்ந்தும் காணப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

எனினும், பிரதேசத்தின் தற்போதைய நிலை மற்றும் பிரதேச சபையின் வருவாயை கருத்தில் கொண்டு இந்த வார மளவில் உள்ளூருக்குள் மணலை விற்பனை செய்து பிரதேச சபை ஊடாக வருமானத்தை பெற்றுக்கொள்ளவுள்ளதுடன், அந்த வருமானத்தை பிரதேசத்தின் அபிவிருத்திக்கு பயன்படுத்தவுள்ளதாகவும் அவர் கூறினார்.

### சவூதி அரேபியா உள்ளிட்ட சில நாடுகளின் பயணிகளுக்கு தடை விதித்தது இலங்கை!

கொழும்பு, ஜூன் 29

கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக சவூதி அரேபியா உள்ளிட்ட சில மத்திய கிழக்கு நாட்டுப் பயணிகள், நாட்டுக்குள் பிரவேசிப்பதற்கு இலங்கை அரசு தடை விதித்துள்ளது.

அதன்படி, ஜூலை 1ஆம் திகதி முதல் இது நடைமுறைக்கு வரும் எனவும் சுற்றுலாத்துறை அமைச்சு அறிவித்துள்ளது.

அதன்படி, சவூதி அரேபியா, கட்டார், ஐக்கிய அரபு இராச்சியம், ஓமான், பஹ்ரைன் மற்றும் குவைத் ஆகிய நாட்டுப் பயணிகளுக்கு இலங்கை தடை விதித்துள்ளது.

# அஸாத் சாலிக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல்

கொழும்பு, ஜூன் 29

கைது செய்யப்பட்ட மேல் மாகாணத்தின் முன்னாள் ஆளுநர் அஸாத் சாலிக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக சட்டமா அதிபரால் உயர் நீதிமன்றத்துக்கு நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாத தடைச்சட்டம் மற்றும் ஐ.சி.சி.பி.ஆர் சட்டத்தின் கீழ் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் இந்த குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக சட்டமா அதிபர் அறிவித்துள்ளார்.

மார்ச் 09 ஆம் திகதி ஊடக சந்திப்பில் அவர் தெரிவித்த கருத்து தொடர்பாக, மார்ச் மாதம் 16 ஆம் திகதி அஸாத் சாலி குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கையில் கொரோனா குறையவில்லை; பி.சி.ஆர். பரிசோதனைகளே குறைந்துள்ளன!

## மருத்துவ ஆய்வக தொழில்நுட்ப வல்லுநர் சங்கம் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூன் 29

இலங்கையில் அண்மைய நாட்களில் குறைந்தளவான கொரோனா தொற்று நோயாளர்கள் பதிவாகி வருவதற்குக் காரணம் பி.சி.ஆர். பிரிசோதனைகள் குறைக்கப்பட்டுள்ளமையே என மருத்துவ ஆய்வக தொழில்நுட்ப வல்லுநர்கள் சங்கத் தலைவர் ரவி குமுதேஷ் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் கடந்த வாரத்தில் தினசரி 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில்தினசரி 2,000 இற்கும் மேற்பட்ட தொற்று நோயாளர்கள் அடையாளம்காணப்பட்டனர்.

அதன் பின்னர் பி.சி.ஆர். பரிசோதனைகள் படிப்படியாகக் குறைக்கப்பட்டதால் உறுதிப்படுத்தப்படும் தொற்று நோயாளர் தொகையும் புள்ளிவிபரங்களில் குறைந்து வருகிறது.

கடந்த சனிக்கிழமை இலங்கையில் 46 நாட்களுக்குப் பின்னர் குறைந்தளவாக 1,835 தொற்று நோயாளர்கள் உறுதிப்படுத்தப்பட்டனர். இதற்குக் காரணம் அன்று வெறும் 14,110 பி.சி.ஆர் சோதனைகளே நடத்தப்பட்டதாகும்.

எனவே, நாட்டில் தொற்று நோயாளர்கள் தொகை குறையவில்லை. பரிசோதனைகள் குறைக்கப்பட்டுள்ளதால் குறைந்தளவு தொற்று நோயாளர்களே உறுதிப்படுத்தப்படுகின்றனர் என சுகாதாரத்துறை சார்ந்தோர் தெரிவித்துள்ளனர்.

நாட்டில் ஜூன் 21 மற்றும் 22 ஆம் திகதிகளில்18,764 சோதனைகள் நடத்தப்பட்டன. இந்த எண்ணிக்கை ஜூன் 23 அன்று 20,577 சோதனைகளாக அதிகரித்தது. அதன் பின்னர் படிப்படியாக சோதனைகள் குறைக்கப்பட்டு வருகின்றன.

ஜூன் 24 அன்று 19,66, ஜூன் 25 அன்று 17,552, ஜூன் 26 அன்று 14,110 சோதனைகள் நடத்தப்பட்டன. ஜூன் 23 முதல் 26 வரை நாட்டில் செய்யப்படும் பி.சி.ஆர் சோதனைகளின் எண்ணிக்கை தினசரி சராசரியாக 6,467 ஆல் குறைக்கப்பட்டுள்ளது.

இவற்றின் காரணமாகவே ஜூன் 24 முதல் தினசரி புதிய தொற்று நோயாளர் எண்ணிக்கையும் 2,000இற்கும் குறைவாக பதிவாகி வருகிறது.

பி.சி.ஆர் பரிசோதனைகள் குறைக்கப்பட்டுள்ளமை ஆபத்தானது. இது இந்த ஆண்டு மார்ச் மாதத்தில் செய்யப்பட்ட தவறுகளை மீண்டும் செய்ய வழிவகுக்கும் என்று மருத்துவ ஆய்வக தொழில்நுட்ப வல்லுநர்கள் சங்கத்தலைவர் ரவி குமுதேஷ் எச்சரித்தார். மார்ச் மாதத்தில் இடம் பெற்ற தவறுகளே மூன்றாம் அலைக்கு வழிவகுத்ததாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இலங்கையில் தற்போதுள்ள தொற்று நோய் நிலவரத்தின் பிரகாரம் ஒரு நாளைக்கு குறைந்தது 50,000 சோதனைகள் செய்யப்பட வேண்டும் எனவும் ரவி குமுதேஷ் தெரிவித்தார்.

சுகாதார அமைச்சின் தவறான வழிகாட்டுதல்காரணமாக வைத்தியசாலைகளில் நடத்தப்படும் அன்ரிஜென் பரிசோதனை எண்ணிக்கையும் குறைக்கப்பட்டுள்ளதாகவும் குமுதேஷ் குற்றம் சாட்டினார்.




## வெடிகுண்டுகளை சுமந்து வந்த 'ட்ரோன்'

# விமானப்படை தளத்தை குறி வைத்து தாக்குதல்!

சே. பாலாஜி

இதுவரை, பஞ்சாப் மற்றும் ஜம்மு - காஷ்மீரில் உள்ள பயங்கரவாதிகளுக்கு பாகிஸ்தானில் இருந்து ட்ரோன்கள் மூலமாக ஆயுதங்கள் மட்டுமே விநியோகிக்கப்பட்டு வந்த நிலையில் ஜம்மு விமானப்படைத் தளத்தின் மீது நடத்தப்பட்ட இரட்டை வெடிகுண்டு தாக்குதல் சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

ஜம்மு விமானப்படைத் தளத்தின் தொழில்நுட்ப பகுதியில் நேற்று முன்தினம் ஞாயிறு அதிகாலை சுமார் 1.30 மணியளவில் ட்ரோன் மூலமாக இரண்டு வீரியம் குறைவான வெடிகுண்டுகள் வீசப்பட்டு வெடித்தன என்றும் இந்திய விமானப்படை தெரிவித்திருக்கிறது.

ட்ரோன் மூலமாக தாக்குதல் நடப்பது இதுவே முதல் முறை என்று விமானப்படை தரப்பில் கூறப்படு கிறது. இந்த வெடிகுண்டு தாக்குதலில் அதிர்ஷ்டவச மாக உயிர்ச்சேதமும், பெரியளவிலான பொருட் சேதமும் ஏற்படவில்லை. ஆனால், ஜம்மு விமானப்படைத் தளத்தில் பணியிலிருந்த விமானப்படை வீரர்களில் இருவர் காயங்களுடன் உயிர் தப்பியதாகவும், வெடி குண்டு வெடித்ததில் விமானப்படைத் தளத்தின் மேற் கூரை சேதமடைந்து விட்டதாகவும் பாதுகாப்புத்துறை தரப்பில் முதலில் வெளிவந்த தகவல்களில் கூறப்படுகிறது.

சம்பவம் தொடர்பாக இந்திய விமானப்படை தனது ருவிட்டர் பக்கத்தில் குறைந்த அளவிலான தகவல்களை மட்டும் அறிவித்திருக்கிறது. அதில், "சக்தி குறைந்த 2 வெடிகுண்டுகள் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை நேரத்தில் ஜம்மு விமானப்படைத் தளத்தின் தொழில் நுட்ப பகுதியில் வெடித்திருக்கிறது. அதில், ஒரு குண்டு மேற் கூரையில் விழுந்து வெடித்திருக்கிறது. மற்றொன்று மைதானத்தில் வெடித்துள்ளது" என்று குறிப்பிட்டிருந்தது.

இந்த தகவல் தேசியளவில் தீயாய் பரவியதைத் தொடர்ந்து சில நிமிடங்களில் மீண்டும் மற்றொரு தகவலை இந்திய விமானப்படை வெளியிட்டது. அதில், "எந்த வித பொருள் சேதமும் ஏற்பட வில்லை. இது தொடர்பாக விசாரணை மேற்கொள் ளப்பட்டு வருகிறது" என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அதைத் தொடர்ந்து செய்தி நிறுவனங்களும் வெடிகுண்டு தாக்குதல் தொடர்பாகத் தீவிர விசாரணையில் களமிறங் கின. அதில் இந்த சம்பவத்தில் 2 விமானப்படை வீரர்கள் காயமடைந்துள்ளனரென தங்களின் வட்டார தகவலின் செய்திகளை வெளியிட்டுக் கொண்டிருக்கின்றன.

இந்நிலையில், இந்த வெடிகுண்டு தாக்குதல் தொடர்பாக இந்திய விமானப்படை துணை தளபதி ஆரோராவுடன், மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தொலைப்பேசியில் பேசியதாகவும், விசாரணையைத் தீவிரப்படுத்தி, பாதுகாப்பை வலுப்படுத்துமாறு கூறியதாக இந்திய பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்திருக்கிறது. மேலும், ஜம்முவின் தற்போதைய நிலையை ஆராய விமானப்படைத் தளபதி விக்ரம் சிங் சம்பவ இடத்துக்குச் செல்லவுள்ளாரென கூறப்படுகிறது.

ஜம்மு விமானப்படைத் தளத்தில் வெடிகுண்டுகள் வெடித்த மாத்திரத்தில் சம்பவ இடத்துக்கு வெடிகுண்டு சோதனை மற்றும் தடயவியல் நிபுணர்கள் அடங்கிய குழுக்கள் விரைந்தன. அவர்களின் முதற்கட்ட சோதனை யில் தான் ட்ரோன் மூலம் வீசப்பட்ட இரண்டு வெடிகுண்டு கள் வீரியம் குறைந்தவை என்று கண்டறியப்பட்டதாகக் கூறப்படுகிறது. வெடிகுண்டு தாக்குதல் நிகழ்ந்துள்ள விமானப்படைத் தளத்தில் பயணிகள் விமானம் மற்றும் பாதுகாப்புப் படை விமானங்கள் என இரண்டும் இயக்கப்படுவதால் இந்த தாக்குதல் கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாக மாறியிருக்கிறது. ஆனால், உயிரிழப்புகள் எதுவும் நேரிட வில்லை என்று விமானப்படை திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறது.

அதே போல், விமானப்படையின் தொழில்நுட்ப பகுதியில் வெடிகுண்டுகள் திட்டமிடப்பட்டு வீசப்பட்டுள்ளதால் சம்பவத்தை அவ்வளவு எளிதில் கடந்து போய் விட முடியாது என்று பாதுகாப்புத் துறை தரப்பில் பேசப்பட்டு வருகிறது. விமானப்படைத் தளத்தில் பொதுவாக இரண்டு பகுதிகள் இருக்கும். ஒன்று நிர்வாக பகுதி மற்றொன்று தொழில்நுட்ப பகுதி. இதில், தொழில்நுட்ப பகுதியில் விமானங்கள், ஹெலிகொப்டர்களின் பாகங்கள் மற்றும் விமானப்படையின் கருவிகள் வைக்கப்பட்டிருக்கும். அதே போல், இந்த தளத்தில் kp 17 ஹெலிகொப்டர்கள் மற்றும் போக்குவரத்து விமானங்கள் இருந்துள்ளன. எனவே, இந்த பகுதியில் தாக்குதல் அரங்கேறி யுள்ளதால் தாக்குதலின் இலக்கு பெரிதாக இருந்திருக்கிறது. ட்ரோன் மூலம் வீசப்பட்ட 2 வெடிகுண்டுகளில் ஒன்று ஹெலிகாப்டர் தளத்திற்கு மிக அருகில் வெடித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

முதல் வெடிகுண்டு தொழில்நுட்ப பகுதியில் விழுந்ததைக் கண்டு அதிர்ச்சிய டைந்த வீரர்கள் அந்த பகுதிக்கு விரைந்திருக்கின்றனர். அவர்கள் அங்கு விரைந்த சில நொடிகளில் மற்றொரு வெடிகுண்டும் வெடித்திருக்கிறது. அதன் காரணமாக, இரண்டு வீரர்களுக்கு லேசான காயங்கள் ஏற்பட்டிருக்கிறது.

ட்ரோன் மூலமாக வெடிகுண்டு தாக்குதல் அரங்கேறி யுள்ளது இந்தியாவில் இதுவே முதல் முறை என்று கூறப் படுகிறது. தாக்குதலால் ஏற்பட்ட சேதங்கள் குறைவாக இருப்பினும், ட்ரோன் மூலம் வெடிகுண்டுகளைக் கையாண்ட விதம் விமானப்படை அதிகாரி களை அலற வைத்திருக்கிறது. இதுவரை, பாகிஸ்தானிலிருந்து இந்தி யாவின் பஞ்சாப் மற்றும் ஜம்மு - காஷ்மீரில் உள்ள பயங்கரவாதிகளுக்கு வெடி பொருட்கள் மட்டுமே ட்ரோன் மூலமாக விநியோகிக்கப்பட்டு வந்த நிலையில் இந்த தாக்குதல் மிக முக்கியமானதாகப் பார்க்கப்படுகிறது.

ட்ரோன் எதிர்ப்பு தொழில்நுட்பத்தில் இந்தியா இன்னும் முன்னேற்றம் அடைய வில்லை என்பதால் இஸ்ரேலிலிருந்து பிரத்தியேக ட்ரோன் எதிர்ப்பு தொழில்நுட்பமான "SMASH 2000 PLUS"-ஐ இந்தியா வுக்குக் கொள்முதல் செய்வது தொடர்பாக இந்தியக் கடற்படை சமீபத்தில் இஸ்ரேல் நிறுவனத்துடன் பேச்சு வார்த்தை நடத்தியது. இந்நிலையில், இத்தகைய ட்ரோன் எதிர்ப்பு தொழில்நுட்பங்கள் விரைவில் விமானப்படை யிலும் பயன்பாட்டுக்குக் கொண்டு வர வேண்டும் என்ற கோரிக்கை இந்த வெடிகுண்டு தாக்குதல் சம்பவத்தின் மூலம் வலுப்பெற்றிருக்கிறது.

> **ட்ரோன் மூலமாக வெடிகுண்டு தாக்குதல் அரங்கேறியுள்ளது இந்தி யாவில் இதுவே முதல் முறை என்று கூறப்படுகிறது. தாக்குதலால் ஏற்பட்ட சேதங்கள் குறைவாக இருப்பினும், ட்ரோன் மூலம் வெடிகுண்டுகளைக் கையாண்ட விதம் விமானப்படை அதிகாரிகளை அலற வைத்திருக் கிறது. இதுவரை, பாகிஸ்தானி லிருந்து இந்தியாவின் பஞ்சாப் மற் றும் ஜம்மு - காஷ்மீரில் உள்ள பயங்கரவாதிகளுக்கு வெடி பொருட் கள் மட்டுமே ட்ரோன் மூலமாக விநியோகிக்கப்பட்டு வந்த நிலையில் இந்த தாக்குதல் மிக முக்கியமான தாகப் பார்க்கப்படுகிறது.**



# மட்டக்களப்பில் சூறையாடப்படும் இயற்கை வளங்கள்

**அபிவிருத்தி என்ற போர்வையில் தமிழ் மக்களின் வயிற்றில் அடிக்கும் மணல் கொள்ளையர்களுக்கு சில அரசியல்வாதிகள் உதவி செய்து வருகின்றனர். இவர்களின் இவ்வாறான செயல்பாடுகளினால் எமது மக்களே பாதிக்கப்படுகின்றனர் என்பதை அவர்கள் மறந்து செயல்படுகின்றனர்.**

**மட்டுநகரான்**

வடக்கு,கிழக்கு மக்கள் எதனைப் பாதுகாப்பதற்காகப் போராடினார்களோ, இன்று அவை சத்தமில்லாத வகையில் அபகரிக்கப்படுகின்றன. தமிழர்களின் வளங்கள் மிகவும் திட்டமிட்ட வகையில் சூறையாடப்பட்டு வருகின்றன.

மண்ணைக் காக்க ஆயிரமாயிரம் போராளிகள் தங்களின் உயிர்களைத் தியாகம் செய்துள்ள நிலையில், இன்று எமது மண் எந்தவித இழப்புகளுமின்றி சூறையாடப்பட்டு வருகின்றது.

குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் தமிழர் பகுதிகளில் பாரியளவில் வளங்கள் சுரண்டப்படும் செயல்பாடுகள் மிகவும் திட்டமிட்ட வகையில் முன்னெடுக்கப் படுகின்றன.

யுத்த காலத்தில் தமிழ் மக்களினால் பாதுகாக்கப்பட்ட வளங்கள் சுரண்டப்படுவதுடன், அவற்றினை கபளீகரம் செய்யும் நடவடிக்கைள் துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இயற்கை வளம் கொண்ட பல பகுதிகள் காணப்படுகின்றன. இப்பகுதிகளில் உள்ள இயற்கை வளத்தினைக் கொண்டு தமிழ் மக்கள் அன்றாடம் தங்களது ஜீவனோபாயத்தைக் கொண்டு செல்கின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவான்கரைப் பகுதியானது, இயற்கை வளங்கள் நிரம்பிய பகுதியாகவே இருந்து வருகின்றது. இதன் காரணமாகவே யுத்த காலங்களில் தமிழீழ விடுதலைப் புலிகள் இப்பகுதிகளைப் பாதுகாப்பதில் அதிக கவனம் செலுத்தினார்கள்.

யுத்தத்திற்குப் பின்னர் அந்தப் பகுதிகளைப் பாதுகாப்பதில் தமிழ் மக்கள் கவனம் செலுத்தினாலும், அரசாங்கத்தின் எடுபிடிகளும், அரசாங்கத்தின் பண முதலைகளும் இங்குள்ள வளங்களை இலக்கு வைத்து தமது செயல்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இவ்வாறு தமிழர்களினால் காலங்காலமாக பாதுகாக்கப்பட்டு வரும் பகுதிகளில் ஒன்றாக மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட கித்துள் பகுதி காணப்படுகின்றது.

இப்பகுதியில் அதிகளவான நீர்நிலைகளும், காடுகளும் அதனோடு இணைந்த வயல் நிலங்களும் காணப்படுவதனால் இப்பகுதியானது இயற்கையின் உறைவிடமாகவும் அமைதி வேண்டுவோருக்கு மருந்தாகவும் இருந்து வருகின்றது.

கித்துள் பகுதியை பொறுத்தவரையில், கித்துள் குளத்தினைப் பிரதானமாகக் கொண்டு வடிச்சல்ஆறு, முந்தனையாறுகள் பக்க ஆறுகளாகக் காணப்படுகின்றன. வடிச்சல் ஆற்றினைக் கடந்தால் முந்தனையாறு, அதனைக் கடந்தால், கித்துள்குளம். அதனை அண்டிய பகுதிகளில் விவசாய நிலங்களும், காடுகளும் காணப்படுகின்றன. கடந்த மூன்று வருடங்களுக்கு முன்னர் இயற்கையை விரும்புவோர் அடிக்கடி இப்பகுதிக்குச் சென்று, இயற்கையை ரசிப்பார்கள். ஏராளமானோர் இப்பகுதிக்குச் செல்வார்கள்.

குறிப்பாக இப்பகுதியில் சுமார் 1600 ஏக்கர் காணியில் விவசாய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியிலேயே காலங்காலமாக இவர்கள் விவசாய நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர். அத்துடன் 3000இற்கும் மேற்பட்ட கால்நடைகள் இப்பகுதியில் வளர்க்கப்படுவதுடன், சுமார் 100இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் இப்பகுதிகளில் உள்ள நீர்நிலைகளில் மீன்பிடித் தொழிலை வாழ்வாதாரமாகக் கொண்டுள்ளனர்.

இவ்வளவு வளங்களையும் பயன்படுத்தி, அன்றாடம் தங்களது வாழ்வாதாரத்தைக் கொண்டு நடாத்தும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பயன்பெறும் இப்பகுதிகளில் உள்ள வளங்கள் சுமார் மூன்று வருடங்களாகத் திட்டமிட்ட வகையில் சூறையாடப்படுகின்றன.

தினமும் இப்பகுதியில் உள்ள ஆற்றுப் பகுதிகளில் முன்னெடுக்கப்பட்டு வரும் மண் அகழ்வுகள் காரணமாக அனைத்துத் தரப்பினரும் மிகவும் கஸ்டங்களை எதிர்கொள்ளும் நிலையுள்ளதாகவும், எதிர்காலத்தில் இப்பகுதி அழிந்து விடக்கூடிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படும் எனவும் இப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த மூன்று வருடங்களாக தென்னிலங்கையில் உள்ளவர்களின் அரசியல் செல்வாக்குடன், இங்குள்ள அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் இந்த மண் அகழ்வினை முன்னெடுத்து வருகின்றனர். குறிப்பாக இங்கு அகழப்படும் மண் ரயில் மூலமாகவும், பாரவூர்திகள் மூலமாகவும் தென்னிலங்கைக்கு கடத்தப்படுகின்றன.

இங்குள்ள சிங்களக் கட்சி சார்பு அரசியல்வாதிகளுடன் தொடர்பு கொண்டுள்ள தமிழ் அரசியல்வாதிகளின் ஆதரவுடன் முன்னெடுக்கப்படும் இந்த செயற்பாடுகள் காரணமாக இப்பகுதியின் இயற்கை வளங்கள் பாதிக்கப்படுவதுடன், ஆயிரக் கணக்கான குடும்பங்கள் தொழில் இழக்கும் நிலையும் ஏற்பட்டுள்ளது.

தினமும் நூற்றுக் கணக்கான உழவு இயந்திரங்கள் கொண்டு ஆற்றுப் பகுதிகளில் மண் அகழ்வுகள் முன்னெடுக்கப்படுகின்றன. இதன் காரணமாக ஆற்றுப் பகுதிகளின் ஆழம் அதிகரித்து வருவதுடன் எதிர்காலத்தில் அப்பகுதிகளில் உள்ள வயல் நிலங்கள் அழிந்து செல்லக் கூடிய நிலையும் காணப்படுகின்றன. அத்துடன் மண் அகழ்வு என்ற போர்வையில் அப்பகுதியில் உள்ள காடுகளும் அழிக்கப்படுவதுடன், பெரும் மரங்கள் வெட்டப்பட்டு தென்னிலங்கைக்கு கடத்தப்படுகின்றன என்றும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

தாங்கள் தங்கள் வீட்டுத் தேவைக்கு ஒரு வண்டிலில் மண் எடுத்துச் சென்றாலே பொலிஸார் வந்து தங்களைக் கைது செய்யும் நிலையில், ஒரு நாளைக்கு நூற்றுக் கணக்கான உழவு இயந்திரங்கள் மூலம் சட்ட விரோதமான முறையில் மண் அகழப்படும் போது யாரும் வந்து எந்த நடவடிக்கையும் எடுப்பதில்லை எனவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

ஆற்றுப் பகுதி ஊடாக தினமும் நூற்றுக் கணக்கான உழவு இயந்திரங்கள் செல்வதன் காரணமாக மீன்பிடியில் ஈடுபடுவோர் மீன்பிடிக்க முடியாத நிலையுள்ளதாகவும், சிலவேளைகளில் உழவு இயந்திரங்கள் தங்கள் மீதும் மோதி விட்டுச் செல்வதாகவும் தாங்கள் பொலிஸாரிடம் முறையிட்டால், அன்றைய தினமே மண் அகழ்வில் ஈடுபடுவோர் தங்களை வந்து அச்சுறுத்துவதாகவும் அப்பகுதி மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

தொடர்ச்சியான முறையில் முன்னெடுக்கப்படும் சட்ட விரோத மண் அகழ்வு காரணமாக விவசாயச் செய்கையில் ஈடுபடுவோர் பயணிக்க முடியாத வகையில் வீதிகள் உள்ளதாகவும், வயல் வேலைகளுக்காகப் பொருட்களைக் கொண்டு செல்ல முடியாத நிலையுள்ளதாகவும், அத்துடன் மண் அகழ்வுகள் காரணமாக தங்களது வயல் நிலங்களை வெள்ளம் அடித்துச் செல்லும் நிலை காணப்படுவதாகவும் விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

சிலவேளைகளில் பொலிஸார் அதிகாரிகள் நடவடிக்கையெடுத்து சட்ட விரோத மண் ஏற்றுவோரை கைது செய்தால், மறுநிமிடம் காவல்துறை உயர் அதிகாரிகளிடமிருந்து அவர்களை விடுவிப்பதற்கான கட்டளை வருவதாகவும், இப்பகுதியில் இடம்பெறும் மண் அகழ்வுகள் உயர் அரசியல் கைகளினால் முன்னெடுக்கப்படுவதன் காரணமாக யாரும் எதுவும் செய்ய முடியாத நிலை உள்ளதாகவும் அப்பகுதியில் கடமையாற்றும் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அபிவிருத்தி என்ற போர்வையில் தமிழ் மக்களின் வயிற்றில் அடிக்கும் மணல் கொள்ளையர்களுக்கு சில அரசியல்வாதிகள் உதவி செய்து வருகின்றனர். இவர்களின் இவ்வாறான செயல்பாடுகளினால் எமது மக்களே பாதிக்கப்படுகின்றனர் என்பதை அவர்கள் மறந்து செயற்படுகின்றனர் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் அப்பகுதிக்குச் சென்று பார்வையிட்ட பின்னர் தனது கண்டனத்தைத் தெரிவித்திருந்தார்.

ஆனால், இது தொடர்பில் ஆளும் கட்சி அரசியல்வாதிகளின் கவனத்திற்குப் பல தடவைகள் கொண்டு செல்லப்பட்ட போதிலும், இதுவரையில் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லையெனவும் தமது பகுதியை வந்து பார்க்கவில்லை எனவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

தொடர்ச்சியாக மண் அகழ்வு நடைபெறுவதானது, இப்பகுதி மக்களின் வாழ்வாதாரத்தினை குழி தோண்டிப் புதைக்கும் செயற்பாடாகவும், எதிர் காலத்தில் இப்பகுதியின் இயற்கை வளத்தினை மாறுபட்ட நிலைக்குக் கொண்டு செல்லும் நடவடிக்கையாகவும் பார்க்கப்பட்டு, இதனைத் தடுத்து நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

கிழக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் இவ்வாறான வளச் சுரண்டல்களை தடுத்து நிறுத்த வேண்டிய பொறுப்பு அதனைத்துத் தமிழ்த் தேசியப் பற்றாளர்களுக்கும் உள்ளது. அவற்றினைச் செய்வதற்கு முன்வர வேண்டும்.

**- இலக்கு**



ஈழநாடு

# புலமைச் சிகரம்

**ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி**

மாதிரிப் பரீட்சை - 7
வினாத்தாள் II

நேரம் - 45 நிமிடம்
ஆசிரியர் - சரத்பாபு

கல்வி tv CHANNEL

(52) பின்வரும் எப்பதார்த்தத்தை அதிகளவு அருந்தினால் அதிக தாகம் ஏற்படும்?
(1) சுடுநீர் (2) கோப்பிப் பானம்
(3) அதிக உப்புக் கலந்த நீர் (4) வினாகிரி கலந்த நீர்

(53) பின்வரும் எந்தக் கன்று / நாற்றைப் பிடுங்கி வீட்டுத்தோட்டத்தில் நடும்போது, வாடி இறந்து விடும்?
(1) கத்தரி (2) தக்காளி (3) பூசனி (4) மிளகாய்

(54) தோட்டத்தில் நடும்போது எந்த வித்து முளைக்க நீண்ட நாள் எடுக்கும்?
(1) பாசிப்பயறு (2) உழுந்து (3) கத்தரி (4) புடோல்

(55) நறுமண தைலம் தயாரிக்கப் பயன்படுத்தும் பூ வகை.
(1) அலரி (2) ஓர்க்கீற் (3) மல்லிகை (4) தாமரை

(56) சந்தையில் கொள்வனவு செய்த தேயிலைத்தூளை அரைவாசி நீரைக் கொண்ட கண்ணாடிக்குவளையினுள் இட்டு அவதானிக்கும்போது, தரமற்ற தேயிலையை எவ்வாறு கண்டு பிடிக்கலாம்?
(1) நீரின் மேற்புறத்தில் இளம்சிவப்பு நிறம் தோன்றும்.
(2) நீரின் அடியில் கபில நிறம் தோன்றும்.
(3) நீரின் மேற்பரப்பில் கணப்பொழுதில் கடும் கபிலநிறம் தோன்றி, நீரினுள் மேற்பரப்புக்குப் பரவிச் செல்லும்.
(4) நீரின் அடியில் கணப்பொழுதில் கடும் கபில நிறம் தோன்றி நீரின் மேற்பரப்புக்கு பரவிச் செல்லும்.

(57) புல்லாங்குழல் ஒன்றில் எத்தனை துளைகளைக் காணலாம்?
(1) ஆறு (2) ஏழு (3) எட்டு (4) ஒன்பது

(58) அதிகளவு மணல் மண்ணைக் கொண்ட மாவட்டம்.
(1) வவுனியா (2) கண்டி (3) பொலநறுவை (4) மட்டக்களப்பு

(59) கோழிக் கொண்டை, சேவல் கொண்டை, அழகிய சொர்க்கம், புள்ளிக்கோட்டி போன்றவை.
(1) கோழி இனங்கள் (3) பாம்பு இனங்கள்
(2) மீன் இனங்கள் (4) வண்ணத்துப்பூச்சி இனங்கள்

(60) காட்டில் வாழும் பிராணிகள் உணவு, வாழிடம், பாதுகாப்பு என்பவற்றுக்காக விசேடமாகக் கொண்டுள்ள முறைகள் அல்லாதது எது?
(1) சிறிய ஒலிகளை எழுப்புதல்
(2) வேகமாக ஓடும் திறனைக் கொண்டிருத்தல்
(3) உடலின் நிறத்தை மாற்றும் திறன் காணப்படும்.
(4) மிகச் சிறிய ஒலியைக் கேட்கும் திறனுடையவை.

* * *

## இல - 7 வினாத்தாள் - I விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1. 1 | 11. 1 | 21. 1 | 31. 2 |
| 2. 3 | 12. 2 | 22. 2 | 32. 1 |
| 3. 2 | 13. 2 | 23. 1 | 33. 3 |
| 4. 1 | 14. 3 | 24. 1 | 34. 3 |
| 5. 3 | 15. 2 | 25. 3 | 35. 2 |
| 6. 2 | 16. 3 | 26. 2 | 36. 1 |
| 7. 3 | 17. 1 | 27. 3 | 37. 1 |
| 8. 1 | 18. 3 | 28. 3 | 38. 2 |
| 9. 3 | 19. 2 | 29. 2 | 39. 2 |
| 10. 2 | 20. 2 | 30. 3 | 40. 1 |

1x2.5 = 100 புள்ளி

## இல - 7 வினாத்தாள் - II விடைகள்

*01)*
i. சத்தியனுக்கு
ii. அ. பலர்
ஆ. பேசினார்கள்
iii. எரிச்சலை
iv. வகுப்பாசிரியரை
v. பேசுகிறான்
(6 புள்ளி)

*02)*
i. அளை
ii. பாணம்
(2 புள்ளி)

*03)*
i. பிரதிவாதி
ii. சுயசரிதை
(2 புள்ளி)

*04)*
i. மனம் வருந்துதல் (1 புள்ளி)

*05)*
i. உள்ளளவும் நினை
ii. மூலபலமற்றது
(2 புள்ளி)

*06)*
i. கட கட
ii. அல்லும் பகலும் (2 புள்ளி)

*07)*
i. சென்ற இடமெல்லாம் சிறப்பு
ii. காற்று வாங்கி வருவோரின்
iii. நீர்மேல் எழுத்துக்கு நேர் (3 புள்ளி)

*16)*
* முதல் மூன்று வாக்கியங்களுக்கும் 2 புள்ளிகள் வீதம் (6 புள்ளி)
* எழுவாய் பயனிலைத்தொடர்பு, எழுத்துக்கூட்டல் பிழையாக இருப்பின் புள்ளி வழங்க வேண்டாம்

*08)*
i. ஓடியது
ii. சென்றார்கள்
iii. மொய்த்தன
iv. சென்றது
(4 புள்ளி)

*09)*
i. உயர்திணை, இறந்தகால பன்மை, வினைமுற்று
ii. உயர்திணை, பன்மை, பெயர்ச்சொல்
iii. அஃறிணை ஒருமை படர்க்கைச் சொல்
(3 புள்ளி)

*10)*
i. தயவு செய்து என்னை மன்னிக்கவும்
ii. நாங்கள் வீட்டுக்குப் போவோம்
(2 புள்ளி)

*11)* are (1 புள்ளி)
*12)* book (1 புள்ளி)

*13)* I will come tomorrow
I'll come tomorrow
(1 புள்ளி)

*14)* ஒயா(ட்)ட படகினித? (1 புள்ளி)
*15)* அப்பா வந்தாரா? (1 புள்ளி)



# மேலும் 6 பிரதேசங்கள் முடக்கம்!

கொழும்பு, ஜூன் 29

இரத்தினபுரி மற்றும் மொனராகலை ஆகிய மாவட்டங்களில் நான்கு கிராம சேவகர் பிரிவுகளில் சில பகுதிகள் நேற்றுக் காலை 6 மணி முதல் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

இதன்படி இரத்தினபுரி மாவட்டத்தில் நிவித்திகல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நொரகல்ல கிராம சேவகர் பிரிவில் நொரகல்ல மேல் பிரிவும், யக்தெஹிவத்த கிராம சேவகர் பிரிவில் பின்கந்த 1 மற்றும் பின்கந்த 2 ஆகிய பகுதிகளும் பாதகட கிராம் சேவகர் பிரிவின் பின்கந்த 3ஆம் பகுதியும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

அத்துடன், மொனராகலை மாவட்டத்தில், மொனராகலை பொலிஸ் பிரிவில் நக்கலவத்த கிராமம், மில்லகெலே வத்த கிராமம் ஆகியன தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. (இ)

# தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய மேலும் 428 பேர் கைது

கொழும்பு, ஜூன் 29

தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 428 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

கண்டியில் 93 பேரும், மாத்தளையில் 77 பேரும், கம்பளையில் 58 பேரும் இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதற்கமைவாக தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் இதுவரை கைதுசெய்யப்பட்டடோரின் எண்ணிக்கை 44 ஆயிரத்து 644ஆக உயர்வடைந்துள்ளது. (இ)

# இந்திய மீனவர்கள் ஊடாகவும் டெல்டா வைரஸ் பரவும் ஆபத்து

## இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி எச்சரிக்கை



**கொழும்பு, ஜூன் 29**

**“மனிதனை மூச்சுத்திணற வைத்துக் கொல்லும் டெல்டா கொரோனா வைரஸ், இலங்கையில் விமான நிலையங்கள் மூலமாக மட்டுமின்றி வட பகுதியில் இந்திய மீனவர்கள் ஊடாகவும் மேலும் பரவக்கூடும். எனவே, இந்திய மீனவர்களின் அத்துமீறல் வடபகுதியில் உடன் நிறுத்தப்பட வேண்டும்.”**

- இவ்வாறு வலியுறுத்தினார் தொற்று நோய்கள் மற்றும் கொரோனா கட்டுப்பாட்டு இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“இந்தியாவில் பெருந்தொற்றாக உருவெடுத்த டெல்டா கொரோனா வைரஸ் இன்று இலங்கை உள்ளிட்ட 85 நாடுகளுக்குப் பரவியுள்ளது.

இந்த வைரஸ் தொற்றை ஆரம்பத்திலேயே நாம் கட்டுப்படுத்த வேண்டும். இல்லையேல் இலங்கை முழுவதும் இந்த வைரஸ் பரவக் கூடும்.

அப்படியான நிலைமை ஏற்பட்டால் நாளாந்தம் ஆயிரக்கணக்கான உயிரிழப்புகள் இங்கு பதிவாகும். இந்தியா போன்று இலங்கையிலும் பிணங்கள்தான் குவியும்.

பேராபத்துமிக்க இந்த டெல்டா வைரஸ் தொற்று தொடர்பில் இலங்கை மக்கள் அலட்சியமாக இருக்கக்கூடாது.

வடபகுதியில் இந்திய மீனவர்களின் அத்துமீறல் அதிகரித்துள்ளது. அவர்கள் ஊடாகவும் டெல்டா வைரஸ் இலங்கையில் மேலும் பரவக்கூடும். எனவே, இந்திய மீனவர்களின் அத்துமீறல் வடபகுதியில் உடன் நிறுத்தப்பட வேண்டும்.

கடலுக்கு மீன்பிடிக்கச் செல்லும் இலங்கை மீனவர்கள், இந்திய மீனவர்களுடன் தொடர்பு வைத்திருப்பதைத் தவிர்க்க வேண்டும்” - என்றார். (இ)

# நெல்லியடி பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரிக்குக் கொரோனா

வடமராட்சி, ஜூன் 29

வடமராட்சி, நெல்லியடி பொலிஸ் நிலையப் பொறுப் பதிகாரிக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

நெல்லியடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்குச் சென்று மாதிரிகளை வழங்கியுள்ளார் .

அவற்றில் முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் அவருக்குத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (இ-2)

# கொரோனா சிகிச்சை நிலையத்துக்குள் விசர் நாய் அட்டகாசம்; 3 பெண்கள் காயம்

கொழும்பு, ஜூன் 29

கொரோனா சிகிச்சை நிலையத்துக்குள் திடீரென நுழைந்த விசர் நாயொன்று அங்கு சிகிச்சை பெற்றவர்களில் மூன்று பெண்களைக் கடித்துக் காயப்படுத்திய சம்பவம் மொறவக்க, கொஸ்நில்கொட அரச வைத்தியசாலையில் இடம்பெற்றுள்ளது.



மேற்படி வைத்தியசாலையில் அமைக்கப்பட்டுள்ள கொரோனா சிகிச்சைப் பிரிவில் வெளிநாடுகளில் இருந்து வந்த 18 பெண்கள் உட்பட 38 பேர் சம்பவத்தின்போது இருந்துள்ளனர்.

விசர் நாய் திடீரென உள்ளே புகுந்து, கடிக்க ஆரம்பித்த பின்னர் சிகிச்சை நிலையத்துக்குள் இருந்தவர்கள் கட்டில் மீது ஏறியுள்ளனர். அத்துடன், கூச்சலிட்டுள்ளனர்.

இதனால் வைத்தியசாலை வளாகத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

கடும் சிரமத்துக்கு மத்தியில் வைத்தியசாலை ஊழியர்கள் நாயை விரட்டியடித்துள்ளனர். எனினும், வெளியே இருந்த சிலரால் நாய் அடித்துக் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (இ)



# 26 இலட்சத்துக்கும் மேற்பட்டோருக்கு நாட்டில் கொரோனா தடுப்பூசி

கொழும்பு, ஜூன் 29

இலங்கையில் இவ்வருடம் ஜனவரி 29ஆம் திகதி முதல் ஜூன் 27ஆம் திகதி வரை 26 இலட்சத்து 5 ஆயிரத்து 558 பேருக்குக் கொரோனாத் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது.

ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகமும் அஸ்ட்ரா செனகா நிறுவனமும் இணைந்து உருவாக்கியுள்ள ‘கொவிஷீல்ட்’, சீனாவின் தயாரிப்பான ‘சினோபார்ம்’, ரஷ்ய தயாரிப்பான ‘ஸ்புட்னிக் - 5’ ஆகிய தடுப்பூசிகள் மக்களுக்கு ஏற்றப்பட்டுள்ளன.

இதன்படி கொவிஷீல்ட் தடுப்பூசியின் முதலாவது டோஸ் 9 இலட்சத்து 25 ஆயிரத்து 242 பேருக்கு ஏற்றப்பட்டுள்ளது. இவ்வாறு முதலாவது டோஸைப் பெற்றுக்கொண்டவர்களில் 3 இலட்சத்து 72 ஆயிரத்து 899 பேருக்கு இரண்டாம் டோஸ் ஏற்றப்பட்டுள்ளது.

2021ஆம் ஆண்டு மார்ச் 26ஆம் திகதி முதல் ஜூன் 27ஆம் திகதி வரை 15 இலட்சத்து 65 ஆயிரத்து 521 பேருக்கு சினோபார்ம் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது. இதன் இரண்டாவது டோஸை 5 இலட்சத்து 13 ஆயிரத்து 195 பேர் பெற்றுள்ளனர்.

‘ஸ்புட்னிக் - 5’ தடுப்பூசி ஏற்றும் பணி ஏப்ரல் 30ஆம் திகதி ஆரம்பமானது. ஜூன் 27ஆம் திகதி வரை ஒரு இலட்சத்து 14 ஆயிரத்து 795 பேருக்கு அந்தத் தடுப்பூசியின் முதலாவது டோஸ் ஏற்றப்பட்டுள்ளது. இதில் 14 ஆயிரத்து 425 பேர் இரண்டாம் டோஸைப் பெற்றுள்ளனர்.

அதேவேளை, அடுத்துவரும் நாட்களிலும் இலங்கைக்குத் தடுப்பூசிகள் கிடைக்கப் பெறவுள்ளன. செப்ரெம்பர் மாதம் முடியும் வரை சுமார் ஒரு கோடி 30 இலட்சம் பேருக்குத் தடுப்பூசி ஏற்றக் கூடியதாக இருக்கும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார். நாட்டில் நேற்றும் தடுப்பூசி ஏற்றும் பணி முன்னெடுக்கப்பட்டது. (இ)

# கம்மன்பிலவுக்கு எதிரான பிரேரணை தொடர்பில் விசேட கூட்டத்துக்கு ஏற்பாடு

கொழும்பு, ஜூன் 29

வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையை விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளும் திகதியை நிர்ணயிப்பதற்காக விசேட கூட்டம் நடைபெறவுள்ளது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனதலைமையில்ஜூலை 1 அல்லது 2ஆம் திகதியளவில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் கட்சித் தலைவர்களும், கட்சிகளின் விசேட பிரதிநிதிகளும் பங்கேற்கவுள்ளனர்.


ஜூலை மாதத்துக்கான முதல் வார பாராளுமன்ற அமர்வு ஜூலை



06 ஆம் திகதி ஆரம்பமாகின்றது. அவ்வாரத்துக்கான நிகழ்ச்சி நிரல் குறித்தும் இதன்போது ஆராயப்பட்டு தீர்மானம் எடுக்கப்படவுள்ளது.

வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையை அவசர விடயமாகக் கருதி, விவாதத்துக்கு உட்படுத்துமாறு ஐக்கிய மக்கள் சக்தி சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்துள்ளது. எனினும், விவாதத் திகதி தொடர்பில் மேற்படி கூட்டத்திலேயே தீர்மானம் எடுக்கப்படும்.

இதேவேளை, அதிகரிக்கப்பட்டுள்ள எரிபொருட்களின் விலை மீளக் குறைக்கப்படுமானால் நம்பிக்கையில்லாப் பிரேரணையை மீளப்பெறுவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தயாராகவே உள்ளது என அக்கட்சியின் உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர். (இ)



# செவ்வாய் தரையில் நகரும் சீன ரோவரின் காணொலி!

## ஞாயிறன்று வெளியிடப்பட்டது

பீஜிங், ஜூன் 29

செவ்வாய் கிரகத்தில் ஜூரோங் ரோவர் தரையிறங்கும் ஒலிப் பதிவையும் அது செவ்வாய் தரையில் நகரும் காணொலியையும் சீன விண்வெளி ஆராய்ச்சி நிலையம் வெளியிட்டுள்ளது.

செவ்வாய் கிரகத்தை ஆய்வு செய்வதற்காக சீனா கடந்த ஆண்டு ஜூலை மாதம் தியான்வென் - 1 விண்கலத்தை அனுப்பியது. அது கடந்த பெப்ரவரி மாதம் செவ்வாயின் சுற்றுவட்டப் பாதைக்குள் நுழைந்தது. இது சுமந்து சென்ற ஜூரோங் என்ற 6 சில்லுகள் கொண்ட ரோவர் கடந்த 15ஆம் திகதி செவ்வாய் தரையில் தரையிறங்கியது.

சூரிய சக்தியில் இயங்கும் இந்த ரோவரின் படங்களை சில நாட்களுக்கு முன்னர் வெளியிட்ட சீனா, இப்போது அது தரையிறங்கும் சத்தத்தை ஒலிப் பதிவு செய்து வெளியிட்டுள்ளது. அத்துடன், அது செவ்வாய் தரையில் நகர்ந்து செல்லும் காணொலியையும் வெளியிட்டுள்ளது. (ஐ)

# அணுசக்தி மையங்களின் படங்களை ஐ. நாவுக்கு இனி வழங்கமாட்டோம்!

## ஈரான் பரபரப்பு அறிவிப்பு



தெஹ்ரான், ஜூன் 29

தங்கள் நாட்டின் அணுசக்தி மையங்களின் படங்களை ஐக்கிய நாடுகள் (ஐ. நா.) சபையின் சர்வேதேச அணுசக்தி கண்காணிப்பு அமைப்பிடம் (IAEA ) ஒப்படைக்க முடியாது என்று ஈரான் அறிவித்துள்ளது.

இதனால் ஈரானுடனான அணுசக்தி ஒப்பந்த மீளாய்வு குறித்த அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளின் முயற்சியில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

ஈரான் அணுசக்தி மையங்களின் உள்ளே எடுக்கப்படும் படங்களை ஐ. நாவின் சர்வதேச அணுசக்தி கண்காணிப்பு அமைப்புடன் பகிர்ந்துகொள்வதற்கான ஒப்பந்தம் காலாவதியாகிவிட்டது. எனவே, இனி அத்தகைய படங்கள் எதுவும் அந்த அமைப்பிடம் வழங்கப்படாது என்று ஈரான் பாராளுமன்ற அவைத் தலைவர் முகமது பக்கீர் காலிபஃப் ஞாயிற்றுக்கிழமை கூறினார்.

ஈரான் மீதான பொருளாதாரத் தடைகளை அமெரிக்கா தளர்த்தாது விடின் தங்களின் அணுசக்தி மையங்களுக்குள் ஐ. நாவின் சர்வேதேச அணுசக்தி கண்காணிப்பு அமைப்பு ஏற்கனவே பொருத்திய கண்காணிப்பு கமெராக்கள் அகற்றப்படும் எனவும் ஈரான் கூறியுள்ளது.

ஈரானுக்கும் அமெரிக்கா உள்ளிட்ட ஐ. நா. பாதுகாப்பு சபை நிரந்தர உறுப்பு நாடுகள் மற்றும் ஜேர்மனிக்கும் இடையே கடந்த 2015ஆம் ஆண்டு அணுசக்தி ஒப்பந்தம் கையெழுத்தானது. அதில், தனது அணுசக்தி திட்டங்கள் அணு ஆயுதம் தயாரிப்பதற்கானவை இல்லை என்பதை உறுதி செய்ய ஈரான் சம்மதித்தது.

எனினும், அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஒப்பந்தத்தில் இருந்து விலகியதுடன், ஈரான் மீது மீண்டும் பொருளாதார தடையையும் விதித்தார். இதையடுத்து அந்த ஒப்பந்தங்களை ஈரான் இப்போது மீறி வருகின்றது. இதனால் அந்த ஒப்பந்தம் செயலிழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. எனினும், அமெரிக்காவை மீண்டும் ஒப்பந்தத்தில் இணைப்பதற்கான பேச்சுகள் நடக்கின்றன. இந்த நிலையிலேயே ஈரான் பரபரப்பான இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது. (ஐ)

# ஈரான் ஆதரவு போராளிகள்மீது அமெரிக்கா விமான தாக்குதல்!



வாஷிங்டன், ஜூன் 29

ஈராக் - சிரியா எல்லையில் உள்ள ஈரான் ஆதரவு போராளி குழுக்களின் முகாம்களை குறிவைத்து அமெரிக்கா விமான தாக்குதல்களை நடத்தியுள்ளது.

ஜனாதிபதி ஜோ பைடன் உத்தரவின் பிரகாரம் ஞாயிற்றுக்கிழமை இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன என்று அமெரிக்க பாதுகாப்பு தலைமையகமாக பென்டகனின் ஊடகச் செயலாளர் ஜோன் கிர்பி தெரிவித்தார்.

சிரியா எல்லையில் உள்ள போராளிக் குழுக்களின் இரண்டு ஆயுத சேமிப்பு மையங்கள் மற்றும் ஈராக் எல்லையில் உள்ள இவ்வாறான ஒரு மையம் மீது தாக்குல் நடத்தப்பட்டது. ஆளில்லா விமானங்களைப் பயன்படுத்தி ஈராக் படைகளுக்கு எதிராக இந்தப் பகுதிகளில் இருந்து போராளிக் குழுக்கள் தாக்குதல் நடத்திவருகின்றன எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்தத் தாக்குதல்களை 'தற்காப்பு' என்று விவரித்த அவர், ஈரான் ஆதரவு குழுக்களின் தாக்குதல்களுக்கு பதிலளிக்கும் வகையில் இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன என்று கூறினார்.

அதிகரிக்கும் அபாயத்தை கட்டுப்படுத்த தேவையான மற்றும் பொருத்தமான நடவடிக்கையை அமெரிக்க முன்னெடுத்தது எனவும் பென்டகன் ஊடாகச் செயலாளர் ஜோன் கிர்பி குறிப்பிட்டார். (ஐ)

# சோமாலியாவில் தற்கொலை தாக்குதல்: 17 படையினர் உட்பட 30 பேர் உயிரிழப்பு

மொகதிஷு, ஜூன் 29

சோமாலியாவில் கார் மூலம் நடத்தப்பட்ட தற்கொலை தாக்குதலில் 30 பேர் பலியாகினர்.

மத்திய சோமாலியாவின் விசில் நகரில் அல்-ஷபாப் பயங்கரவாதிகள் கார் மூலம் நேற்று தற்கொலை தாக்குதலை நடத்தினர். இந்த சம்பவத்தில் 17 இராணுவத்தினர் உட்பட 30 பேர் பலியாகினர். பலர் காயமுற்றனர்.

இதன்போது, நடந்த துப்பாக்கி சண்டையில் பயங்கரவாதிகள் தரப்பிலும் பலத்த சேதம் ஏற்பட்டதாக அந்த நாட்டின் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்தார்.

சோமாலியாவில் அல்-ஷபாப் இயக்கமும் அரசாங்கமும் நீண்ட காலமாக மோதி வரு கின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)




# முன்னாள் பொலிஸ் அதிகாரி குடும்பத்துடன் படுகொலை!

## இந்தியாவில் கொடூர சம்பவம்

புதுடில்லி, ஜூன் 28

இந்தியாவின் ஜம்மு காஷ்மீரில் முன்னாள் பொலிஸ் விசேட படை அதிகாரி ஒருவர் தீவிரவாதிகளால் குடும்பத்துடன் சுட்டுக் கொல்லப்பட்டார்.

புல்வாமா மாவட்டத்தில் உள்ள அவந்திபோரா என்ற இடத்திலேயே ஞாயிற்றுக் கிழமை இரவு 11 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தீவிரவாதிகள் வீட்டுக்குள் புகுந்து நடத்திய இந்தத் தாக்குதலில் முன்னாள் பொலிஸ் விசேட பிரிவு அதிகாரி பயஸ் அகமது, அவரின் மனைவி ராஜா பேகம் ஆகியோர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். படுகாயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட இவர்களின் மகள் ராபியா நேற்று காலை மரணமானார்.

இந்த படுகொலைகளை அடுத்து அவந்திபோரா பகுதி முழுவதும் தற்போது பொலிஸாரின் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டுள்ளது. (ஐ)

# 20,000 ஆண்டுகளுக்கு முன்னரும் கொரோனா மக்களை தாக்கியது!

சிட்னி, ஜூன் 29

கிழக்கு ஆசியாவில் சுமார் 20 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் கொரோனா வைரஸ் தொற்று நோயை மக்கள் எதிர்கொண்டனர் என்பதற்கான சான்றுகள் உள்ளன என்று புதிய ஆராய்ச்சி ஒன்றில் தெரிய வந்துள்ளது.

இதற்கான ஆதாரங்களை அவுஸ்திரேலியா, அமெரிக்காவை சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் குழு கண்டறிந்துள்ளதாக அறிவியல் இதழ் ஒன்று கூறுகின்றது.

உலகெங்கும் உள்ள 26 வெவ்வேறு மக்களிடம் இருந்து பெற்ற 2,500இற்கும் மேற்பட்டவர்களின் மரபணுக்களை ஆய்வு செய்து ஆராய்ச்சியாளர்கள் இந்த முடிவுக்கு வந்துள்ளனர்.



கிழக்கு ஆசியாவில் தற்போதுள்ள மக்களின் மரபணுக்களுடன் 20 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த மக்களின் மரபணுக்கள் ஒப்பீடு செய்யப்பட்டதில் கோவிட் 19 வைரஸ் தொற்று நோய் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இருந்தமை ஆய்வில் தெரிவந்துள்ளதாக முன்னணி அறிவியல் எழுத்தாளர் யாசின் சோயில்மி தெரிவித்துள்ளார்.



# யூரோ கிண்ண உதைபந்தாட்டம்: வெளியேறியது போர்த்துக்கல்!

செவில்லி, ஜூன் 29

பெல்ஜியம் அணியிடம் அதிர்ச்சி தோல்வியடைந்த போர்த்துக்கல் அணி யூரோ கிண்ண தொடரிலிருந்து வெளியேறியது.

யூரோ கிண்ணத்துக்காக ஐரோப்பாவின் 24 நாடுகள் மோதி வருகின்றன. இந்தத் தொடரின் 16 அணிகள் சுற்றுப் போட்டி தற்போது நடக்கிறது. இதில், ஸ்பெயினின் செவில்லி நகரில் நடந்த போட்டியில் போர்த்துக்கல் - பெல்ஜியம் அணிகள் மோதின.

போர்த்துக்கல் அணியின் தலைவர் கிறிஸ்ரியானோ ரொனால்டோ விளையாடும் இறுதி யூரோ கிண்ணத் தொடராக இது கருதப்படுகின்றது. இதனால், போர்த்துகல் கிண்ணம் வெல்லும் என்று பலரும் விரும்பினர்.

பலத்த பரபரப்புக்கு மத்தியில் நேற்று ஆரம்பமான போட்டியில் இரு அணிகளும் மிகுந்த சவால் விடுத்தன. இருப்பினும் முதல் பாதி ஆட்டத்தில் பெல்ஜியம் அணியின் தோர்கன் ஹஷார்ட் 42ஆவது நிமிடத்தில் கோல் அடித்தார்.

பதிலுக்கு கோல் அடிக்க போர்த்துக்கல் முயன்றபோதும் அது முடியவில்லை. இறுதியில் 1 - 0 என்ற கோல் கணக்கில் தோல்வியடைந்ததால் போர்த்துக்கல் அணி தொடரிலிருந்து வெளியேறியது.

காலிறுதிப் போட்டிக்கு முன்னேறிய பெல்ஜியம் அணி இத்தாலி அணியை எதிர்கொள்ளவுள்ளது. (ஐ)

## யூரோ கிண்ண உதைபந்து:

# காலிறுதியில் இத்தாலி!




லண்டன், ஜூன் 29

ஆஸ்திரிய அணியை மேலதிக நேரத்தில் 2 - 1 என்ற கோல் கணக்கில் வென்று காலிறுதிக்கு தகுதி பெற்றுது இத்தாலி.

ஐரோப்பிய நாடுகள் மோதும் யூரோ கிண்ண உதைபந்தாட்டத்தில் 16 அணிகள் சுற்றுப் போட்டி தற்போது நடக்கிறது.

இதில், லண்டனில் நேற்று முன்தினம் நள்ளி ரவு நடந்த போட்டியில் இத்தாலி, ஆஸ்திரிய அணிகள் மோதின.

போட்டியின் ஆரம்பம் முதலே ஆஸ்திரியா இத்தாலிக்கு கடும் நெருக்கடி கொடுத்தது. போட்டி முடியும் வரை விறுப்பாக நகர்ந்தாலும் இரு அணிகளாலும் கோல் அடிக்க முடியவில்லை.

இதனால், வெற்றி - தோல்வியை கணிக்க மேலதிகமாக 30 நிமிடங்கள் வழங்கப்பட்டன. 95ஆவது நிமிடம் ஸ்பினாஜ்ஜோலா கொடுத்த பந்தை வாங்கிய சியசா இத்தாலி அணிக்கா முதல் கோலை அடித்தார்.

அடுத்த 10 வது நிமிடத்தில் அசெர்பியிடம் இருந்து வாங்கிய பந்தை பெஸ்சினா (105ஆவது நிமிடம்) இடது காலால் உதைத்து கோல் அடித்தார். போட்டியின் 114ஆவது நிமிடத்தில் ஆஸ்திரிய அணிக்கு கலாஜ்டிக் தலையால் முட்டி ஒரு கோல் அடித்தார். இறுதியில் 2 - 1 என்ற கோல் கணக்கில் இத்தாலி அணி காலிறுதிக்கு முன்னேறியது. (ஐ)

# ஒலிம்பிக் தொடர்: செரீனா விலகல்!


நியூயோர்க், ஜூன் 29

பிரபல ரென்னிஸ் வீராங்கனையான செரீனா வில்லியம்ஸ் ரோக்கியோ ஒலிம்பிக் போட்டியிலிருந்து விலகியுள்ளார்.

"ஒலிம்பிக் போட்டியில் விளையாட வேண்டும் என்று எனக்குத் தோன்றவில்லை. ஒலிம்பிக் போட்டிகள் எனக்கு அற்புதமாக அமைந்துள்ளன. மன்னிக்கவும்", என்று செரீனா கூறியுள்ளார்.



இதற்கு முன்னர், பிரபல வீரர் நடால் விம்பிள்டன், ரோக்கியோ ரென்னிஸ் தொடரிலிருந்து விலகினார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



# இலங்கை கிரிக்கெட் அணியின் 3 வீரர்களுக்கு இடைக்கால தடை!

குசல் மெண்டீஸ், தனுஷ்க குணதிலக, நிரோஷன் டிக்வெல்ல ஆகியோரை இலங்கை கிரிக்கெட் செயல்குழு இடைநீக்கம் செய்துள்ளது.

இலங்கை அணி தற்போது இங்கிலாந்து சுற்றுப்பயணத்திலுள்ளது. இதன்போது அவர்கள் உயிர் குமிழி பாதுகாப்பு நடைமுறையை மீறிய குற்றத்திற்காகவே இடைநிறுத்தப்பட்டனர் என்று கிரிக்கெட் சபையின் செயலாளர் மொஹான் டி சில்வா தெரிவித்துள்ளார்.

குசல் மெண்டீஸ், நிரோஷன் டிக்வெல்ல ஆகியோர் ஞாயிற்றுக்கிழமை இரவு டர்ஹம் வீதிகளில் சுற்றித் திரியும் காணொலிகள் வெளியாகின. இவர்களுடன் தனுஷ்க குணதிலக இருந்தார் என்று கூறப்படுகின்றது. இதையடுத்தே அவர்கள் மூவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

# மேற்கிந்தியத் தீவுகளுக்கு தென்னாபிரிக்கா பதிலடி!

சென். ஜோர்ஜ், ஜூன் 29

இரண்டாவது இருபது - 20 போட்டியில் 16 ஓட்டங்களால் மேற்கிந்தியத் தீவுகளை வெற்றி கொண்டது தென்னாபிரிக்கா. இதன் மூலம் முதல் போட்டியில் ஏற்பட்ட தோல்விக்கு அந்த அணி பதிலடி கொடுத்துள்ளது.

மேற்கிந்தியத்தீவுகளுக்கு சென்றுள்ள தென்னாபிரிக்க அணி தற்போது இருபது - 20 தொடரில் விளையாடி வருகின்றது.

நேற்று முன்தினம் இரவு நடந்த இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத்தீவுகள் அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி, பவர் பிளே முடிவில் விக்கெட் இழப்பின்றி 69 ஓட்டங்களைப் பெற்றது.

குயின்ரன் டி கொக் 6.5ஆவது ஓவரில் 2 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்களுடன் 26 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.



மற்றொரு தொடக்க வீரரான ரீஸா ஹென்றிக்ஸ் 5 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 42 ஓட்டங்களையும், பவுமா 5 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 46 ஓட்டங்களையும் குவித்து ஆட்டமிழந்தார்.

எனினும் பின்னர் வந்த வீரர்கள் ஆட்டத்தில் சொதப்பவே தென்னாபிரிக்க அணி 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்கள் இழப்புக்கு 166 ஓட்டங்களைப் பெற்றது. மேற்கிந்தியத் தீவுகளின் பந்துவீச்சில் மக்கோய் 3, கெவின் சின்கிளையர் 2 விக்கெட் களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு லெவின், பிடெச்சர் இணை தொடக்கம் கொடுத்தது.

லெவிஸ் 16 பந்துகளில் 21, பிளெட்சர் 36 பந்துகளில் 35 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தனர். அடுத்து வந்த அதிரடி வீரர் கிறிஸ் கெயில் 8, நிக்கோல்ஸ் பூரண் 9, கிரன் பொலார்ட் 1, ரஷல் 5 என்று சொற்ப ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தனர். 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்கள் இழப்புக்கு 150 ஓட்டங்களை பெற்ற மேற்கிந்தியத் தீவுகள் தோல்வியடைந்தது.

தென்னாபிரிக்காவின் பந்துவீச்சில் ரபாடா 3, லின்ட் 2 விக்கெட்களைக் கைப்பற்றினர்.

போட்டி நாயகனாக லின்ட் தெரிவானார்.

தென்னாபிரிக்காவின் வெற்றியால் 5 போட்டிகள் கொண்ட தொடர் 1 - 1 என்ற கணக்கில் சமநிலையாகியுள்ளது. (ஐ)

# அனைத்து அரசியல் கைதிகளையும் விரைவில் விடுதலை செய்யுங்கள்!

## அரசிடம் சார்ள்ஸ் எம்.பி. வேண்டுகோள்



மன்னார், ஜுன்,29

"நீதிமன்ற விசாரணையில் உள்ள அரசியல் கைதிகள், நீதிமன்றத் தீர்ப்பின் பின்னர் உயர் நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்துள்ள அரசியல் கைதிகள், இன்னும் வழக்குத் தாக்கல் செய்யாத அரசியல் கைதிகள் என அனைத்து அரசியல் கைதிகளையும் மிக விரைவில் விடுதலை செய்ய அரசு துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்."

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

மன்னாரிலுள்ள தமது அலுவலகத்தில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பில் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 24ஆம் திகதி பொசன் தினத்தை முன்னிட்டு நாட்டின் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, அரசியல் கைதிகள் 16 பேரை விடுதலை செய்துள்ளார்.

குறித்த 16 பேரும் ஏற்கனவே நீதிமன்றத்தால் தீர்ப்பு வழங்கப்பட்டு இன்னும் குறுகிய காலத்தில் தங்களுடைய தண்டனைக் காலத்தை நிறைவு செய்து வெளியில் வர இருந்தவர்கள்.

குறிப்பாக அதில் இரண்டு பேர் மாத்திரமே 4 வருடம் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டியவர்கள். ஏனைய 14 பேரும் ஒரு வருடத்துக்குள் சிறையிலிருந்து வெளிவர இருந்த வேளையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

எனினும், அரசியல் கைதிகள் அனைவரையும் மிக விரைவில் விடுதலை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை அரசிடம் நான் முன்வைக்கின்றேன்.

குறித்த அரசியல் கைதிகளோடு சேர்த்து தென்னிலங்கையைச் சேர்ந்த ஓர் அரசியல் பிரமுகரான மரணதண்டனைக் கைதி ஒருவரையும் ஜனாதிபதி விடுதலை செய்துள்ளார்.

குறித்த மரணதண்டனைக் கைதியின் விடுதலையை ஐ.நா., அமெரிக்க செயலகங்கள் எதிர்த்துள்ளன. இலங்கை சட்டத்தரணிகள் சங்கம்கூட குறித்த அரசியல் பிரமுகரின் விடுதலைக்கு ஜனாதிபதியிடம் விளக்கம் கேட்டுள்ளது.

ஜனாதிபதி ஏற்கனவே தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி மிருசுவில் பகுதியில் பொது மக்களைப் படுகொலை செய்த குற்றவாளியான இராணுவ அதிகாரியை விடுதலை செய்திருந்தார்.

எனவே, ஜனாதிபதி தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி சிறையில் இருக்கும் சகல அரசியல் கைதிகளையும் விடுதலை செய்ய வேண்டும்.

இந்தப் புதிய அரசு ஆட்சிக்கு வந்ததன் பிற்பாடு, சமூக வலைத்தளங்களில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக செய்திகள் பிரசுரித்தார்கள் என்னும் குற்றச்சாட்டில் பலரைப் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்திருந்தது. அவர்களையும் ஜனாதிபதி விடுதலை செய்ய வேண்டும்.

இதேவேளை, நாட்டில் தொடர்ந்தும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுகள் இடம்பெறுவது கண்டிக்கத்தக்க விடயம் என்பதை இங்கு நான் பதிவு செய்கின்றேன்.

குறிப்பாக பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் பாதிப்புக்களை சிங்கள மக்கள் இப்போதுதான் உணர்ந்து கொண்டிருக்கின்றார்கள். ஏனெனில், தென்பகுதியைச் சேர்ந்த அரசியல் பிரமுகர்கள் மற்றும் அரசை எதிர்க்கின்றவர்களை பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் இந்த அரசு கைது செய்து வருகின்றது.

அந்தவகையில் தற்போது தான் இந்தப் பயங்கரவாதத் தடைச் சட்டம் எவ்வளவு பாதகமானது என்பதைத் தென் பகுதி சிங்கள மக்கள் உணர்ந்துள்ளார்கள்" - என்றார். (இ)

# அரசியல் கைதிகள் விடயத்தில் ஜனாதிபதியுடன் பேசி முடிவு!

## அமைச்சர் நாமல் ராஜபக்ஷ

வடமராட்சி, ஜுன் 29

அரசியல் கைதிகள் விடயத்தில் எடுத்தோம் கவிழ்த்தோம் என்று செயல்பட முடியாது. அதற்கென்று ஒருமுறைமை உள்ளது. அதன் பிரகாரம் ஜனாதிபதியுடன் கலந்துரையாடி முடிவு எடுப்போம் என்று அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் நாமல் ராஜபக்ஷ நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வந்தார்.

வடமராட்சி முள்ளியில் அமைக்கப்பட்ட சேதன பசளை உற்பத்தி நிலையத்தை திறந்து வைத்து செய்தியாளர்களிடம் கருத்துரைத்தபோதே அவர் இதனைக் கூறினார்.

மேலும், ஜனாதிபதியின் கொள்கையின் பிரகாரம் இரசாயன உரத்தில் இருந்து சேதனப் பசளைக்கு செல்லும் காலமிது. இதேபோல் அதனுடன் தொடர்புபட்ட உரத்தை உருவாக்கி பசளையின் தரத்தை உயர்த்தி அதன் மூலம் விவசாயிகளின் பிரச்னைக்கு தீர்வு காணும் இந்த காலகட்டத்தில், இந்த இயந்திரத்தை அமைச்சர் றொசான் ரணசிங்கவின் அமைச்சினூடாக யாழ். மாவட்டத்திற்கு வழங்கியுள்ளோம்.

இங்கே சேகரிக்கப்படும் சுமார் 50 தொன் குப்பைகளை பசளையாக்க முடியும். குப்பைப் பிரச்னைக்கு தீர்வு காணும், அதே வேளை சேதனப் பசளையை உற்பத்தி செய்து விவசாயிகளின் பிரச்னையையும் தீர்க்க முடியும்.- என்றார். (ஐ-2)

# எம்.பியாகும் கோரிக்கையை நிராகரிக்கவில்லை பஸில்

## விரைவில் சாதகமான அறிவிப்பை அவர் விடுப்பார் என்கிறது 'மொட்டு'



கொழும்பு, ஜுன் 29

**"பாராளுமன்றம் வருமாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி உட்பட பல தரப்பினரும் பஸில் ராஜபக்சவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். அந்தக் கோரிக்கையை அவர் நிராகரிக்கவில்லை. எனவே, சாதகமான அறிவிப்பை அவர் விரைவில் விடுப்பார்."**

- இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் எம்.பி. தெரிவித்தார்.

பஸில் ராஜபக்சவின் பாராளுமன்ற வருகை தொடர்பில் நேற்று எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"பஸில் ராஜபக்ச அரசியல் ரீதியாகவும் பலம் பொருந்திய நபர். பழமையான ஐந்து கட்சிகளை பின்னுக்குத் தள்ளிவிட்டு 'மொட்டு' கட்சியை முதலிடத்துக்கு கொண்டுவந்தார்.

குறுகிய காலப்பகுதியில் ஆட்சியை மீளப் பிடித்ததுடன், எமது கட்சியிலிருந்து ஜனாதிபதியையும் அவர் உருவாக்கினார். எனவே, அவ்வாறான தொரு நபர் பாராளுமன்றம் வருவதற்கு பிரத்தியேக பிரசாரம் தேவையில்லை. அவர் நிச்சயம் வரவேண்டும்" - என்றார். (இ)

# இழந்த ஆசனங்களைப் மீளப்பெறும் நோக்கில் அரசுக்கு எதிராக எதிரணி அவதூறுப் பரப்புரை

## அமைச்சர் காமினி லொக்குகே குற்றச்சாட்டு

கொழும்பு, 29

"எதிர்க்கட்சிகள் யதார்த்தத்தைப் புரிந்துகொள்ளாமல் அரசுக்கு எதிரான அவதூறுகளைப் பரப்பி வருகின்றன. இழந்த ஆசனங்களைப் மீளப்பெறும் நோக்கிலேயே எதிரணியினர் இவ்வாறான செயல்பாடுகளில் ஈடுபடுகின்றனர்."

- இவ்வாறு போக்குவரத்து அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"கொரோனா வைரஸ் தொற்று காரணமாக இலங்கை மாத்திரமன்றி உலக நாடுகள் பலவும் தற்போது பொருளாதார நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றன.

எனினும், இலங்கை அரசு அந்த நெருக்கடிகளுக்கு இயன்றளவு தீர்வுகளைக் கண்டு வருகின்றது.

ஆரம்பத்தில் இலங்கைக்குத் தடுப்பூசிகள் கொண்டு வரப்படுவதில்லை என்று குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. பின்னர் தடுப்பூசிகளைச் செலுத்துவதில்லை என்றும், ரெபிட் அன்ரிஜென் பரிசோதனைகளை மேற்கொள்வதில்லை என்றும் ஐக்கிய மக்கள் சக்தியும், மக்கள் விடுதலை முன்னணியும் குற்றஞ்சாட்டின.

அனைத்து சவால்களுக்கும் ஜனாதிபதியும் சுகாதாரத் துறையினரும் முகம் கொடுத்து தீர்வுகளைப் பெற்றுக்கொடுத்தனர். தற்போது உரப்பிரச்னை யைக் களத்தில் இறக்கியுள்ளார்.

நாட்டை முன்னேக்கிக் கொண்டு செல்லும் வேலைத் திட்டத்தையே நாம் முன்னெடுத்துள்ளோம். எதற்காக நாம் இரசாயன உரப்பாவனை தொடர்பில் பேசுகின்றோம் என்பதைப் புரிந்துகொள்ளாத எதிர்த்தரப்பினர் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்கின்றனர். இத்தகைய இக்கட்டான சூழ் நிலையிலும்கூட நாம் அரசு என்றவகையில் அதனை எதிர்கொள்கின்றோம்.

ஆனால், சஜித் பிரேமதாஸ அடுத்த தேர்தலில் வாக்குகள் கிடைக்கும் என எண்ணுகின்றார். அதேபோல் மக்கள் விடுதலை முன்னணியினர் இழந்த ஆசனங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என எண்ணுகின்றனர். அதேபோல் ரணில் விக்கிரமசிங்க தனித்து வருகை தந்து அரசை உருவாக்க முடியுமா என சிந்திக்கின்றார். ஆனால், நாம் யதார்த்தத்தை விளங்கிக் கொண்டு நாட்டை நிர்வகித்துக் கொண்டு செயற்படுகின்றோம்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அனைத்து பிரச்னைகள் தொடர்பிலும் விளங்கிக் கொண்டு சிந்தித்துச் செயல்படுகின்றார். அதில் கொரோனா பிரச்சினை முக்கியமானதாகும்.

கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்த வேண்டும். அதற்காகவே நாம் நாட்டை முடக்கியிருந்தோம். அதன் ஊடாக கொரோனா தொற்றை குறைத்துக்கொள்ள கூடியதாகவிருந்தது. அதேபோல் நாட்டு மக்களுக்கு தேவையாக தடுப்பூசி மருந்தையும் வழங்கி வருகின்றோம்" - என்றார். (இ)

## வடமாகாண...

பூநகரி, கௌதாரிமுனை கடல் பரப்பில் கடலட்டை வளர்ப்பில் ஈடுபடும் சீன நிறுவனம் தொடர்பில் ஆராய்வதற்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ சுமந்திரன் மற்றும் சி.சிறிதரன் ஆகியோர் நேற்று குறித்த பகுதிக்குச் சென்றிருந் தனர்.

இதையடுத்து, ஊடகங்கள் மத்தியில் கருத்து வெளியிட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரன்,

“சீன நிறுவனம் கடலட்டை வளர்ப் பில் ஈடுபட்டு வருகின்றமை வெளிச்சத் துக்கு வந்துள்ளது. இந்த விடயத்தை பார்ப்பதற்காக நாங்கள் சென்றிருந் தோம். அந்த இடம் மக்களுக்குத் தெரியாத மறைவிடமாக அமைக்கப் பட்டுள்ளது.

குறித்த நிறுவனத்தினர் அரியாலை யில் தமது அலுவலகத்தை வைத்துள்ள னர் என்ற விபரத்தையும் நாங்கள் சேகரித்துள்ளோம். சட்டவிரோதமான அனுமதி கடற்றொழில் அமைச்சால் வழங்கப்பட்டுள்ளது.

சட்டவிரோதமாக இந்தத் தொழிலில் ஈடுபடுவதற்கு ஒருவருக்கு அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது என்பதற்கு அப்பால், இந்த நாட்டிலே சீன ஆதிக் கத்தை மேலும் வலுப்படுத்துவதற்கான முயற்சியாகவே இதனை நாங்கள் பார்க்கின்றோம்.

நேற்று (நேற்றுமுன்தினம்) குடத்த னையில் உள்ள எனது வீட்டுக்குச் சென்று திரும்புகின்றபோது வீதி அபி விருத்தி பணிகளில் சீனர்கள் நின்றார்கள். நான் படம் எடுத்து வைத்துள்ளேன். வீதி வேலை செய்வதற்குத் தொழிலாளிகள் கூட எங்கள் ஊரில் எடுக்காமல் சீனாவிலிருந்து இறக்குமதி செய்கின் றார்கள்” - என்றார். (இ)

## அரியாலை...

ஏனைய இருவரும் சிச்சாவே லீ மற்றும் யுவான் சென் ஆகிய சீனர்களாவர். இவர்களின் வதிவிட முகவரியும் ஒப்பந்தத்தில் சீனா என்றே குறிப்பிடப் பட்டுள்ளது.

இந்த நிறுவனப் பதிவு ஒப்பந்தம் கடல் தொழில் சார்ந்ததாக இருக்கும் என என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிறுவனத்தை அமைக்க தேவையான பரப்பளவு, கொடுப்பன வுகள், பங்குதாரர்களுக்கு இடையிலான பங்கீடுகள் என்பதை குறித்தும் இந்த தொழிற்சாலை பதிவு ஒப்பந்தத்தில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளன.

## தொற்றாளர்...

வரை, யாழ்ப்பாணம் மாவட்டத்தில், தொற்று உறுதி செய்யப்பட்டவர்க ளின் எண்ணிக்கை 5,190 ஆக அதிகரித்துள் ளது. அதேநேரம், கொரோனா தொற் றால் ஏற்பட்ட மரணங்கள் 87ஆக உயர்ந் துள்ளது.

மேலும், 4,616 குடும்பங்களைச் சேர்ந்த 13,793 பேர் சுய தனிமைப்படுத்த லில் உள்ளனர்.

அத்துடன், “சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்துக்குட்பட்ட சாவற்காடு கிராம அலுவலர் பிரிவும் யாழ்ப்பாணப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட ஜே/69, ஜே,71 கிராம அலுவலர் பிரிவுகளும், கரவெட்டி பிரதேச செயலகத்துக்குட்பட்ட கரண வாய் பகுதியும் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

யாழ். மாவட்டத்துக்கு கிடைத்துள்ள 50,000 தடுப்பூசிகள், இன்று (நேற்று) தொடக்கம், முதல் டோஸ் தடுப்பூசி பெற்றவர்களுக்கு வழங்கப்பட்டு வரு கின்றன. முதல் டோஸ் தடுப்பூசி பெற்ற நிலையங்களுக்கே சென்று, 2ஆவது டோஸூக்கான தடுப்பூசிகளை பொது மக்கள் பெற்றுக்கொள்ள முடியும்.

நெடுந்தீவு தவிர்ந்த ஏனைய சகல பிரதேசங்களிலும் 2ஆவது டோஸ் தடுப் பூசி போடும் பணி, வெள்ளிக்கிழமை வரை இடம்பெறும்-என்றார்.

## 1,850...

அதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 21 ஆயிரத்து 249 ஆக உயர்வடைந்துள் ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்று காரணமாக வைத்தியசாலைகள் மற்றும் தனிமைப்படுத்தல் மையங்கள் என்பவற் றில் சிகிச்சை பெறுபவர்களின் எண் ணிக்கை 31 ஆயிரத்து 234 ஆக அதிகரித் துள்ளது. (இ)

## கொண்டாட்டங்...

மீறுவோர் கைது செய்யப்படுவர் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

விருந்துபசாரங்கள், கொண்டாட்டங் கள், ஒன்றுகூடல்கள் தொடர்ந்தும் தடை செய்யப்பட்டுள்ளன. அத்தோடு சில தொழில் நிறுவனங்களைத் திறப்ப தற்கான அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

திறப்பதற்கு அனுமதி பெற்றுள்ள தொழில் நிலை யங்கள் மற்றும் சேவை நிலையங்களில் சமூக இடைவெளி முறையாக பின்பற்றப்பட வேண்டும்.

இது தொடர்பில் பொலிஸார் தொடர்ந்தும் கண்காணிப்பு நடவடிக் கையில் ஈடுபட்டு வருகின்றனர் என, பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பதில் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மாஅதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

போக்குவரத்து கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ள காலப்பகுதிகளில், கொரோனா வைரஸ் பரவலை கட்டுப் படுத்துவதற்காக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப் பட்டுள்ள சுற்றறிக்கை மற்றும் சுகாதார ஒழுங்குவிதிகள் என்பவற்றுக்கு அமை யவே செயற்பட வேண்டும்.

இந்நிலையில் பொது போக்குவரத் தில் ஈடுபடுபவர்கள் உரிய விதிமுறை களை முறையாக பின்பற்றுவதில்லை என்று தெரியவந்துள்ளது.

இதன்போது பொதுப் போக்குவரத்து நடவடிக்கையில் ஈடுபடும் வாகனங்க ளின் சாரதிகள், சாரதி உதவியாளர்கள் மற்றும் வாகன நடத்துநர்கள் அது தொடர்பில் கண்காணிக்கவேண்டும். கொரோனா சட்டவிதிகளை வாகனங்க ளுக்குள்ளும் பின்பற்ற கவனம் செலுத்த வேண்டும்-என்றார்.

## அரசியல்..

நிர்வகித்துச் செல்ல முடியாத இய லாமையே ஆளுந்தரப்பினரால் முன் வைக்கப்படுகின்ற கருத்துக்கள் மூலம் தெளிவாகிறது என்று பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரி வித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-

பஸில் ராஜபக்ஷவின் பாராளு மன்ற பிரவேசத்தில் எமக்கு எவ்வித பிரச்னை யும் கிடையாது. அவர் இதற்கு முன்ன ரும் அரசாங்கத்தில் பல முக்கிய பதவி களை வகித்திருக்கிறார். கொவிட் கட்டுப்படுத்தல் செயல்பாடுகளுடன் தொடர்புடைய இரு விசேட ஜனாதிபதி செயலணிகளின் தலைவராக அவர் பதவி வகித்தார்.

அவற்றில் ஒன்று உணவு பகிர்ந்தளித்த லுடன் தொடர்புடையதும் மற்றையது கொவிட் கட்டுப்படுத்தலுடன் தொடர் புடையதுமாகும். ஆனால் இவை இரண் டும் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்ட னவா? எனவே அவரால் புதிதாக முன் னெடுப்பதற்கு எதுவும் இல்லை. கார ணம் அவர் தற்போதும் அரசாங்கத் தையே பிரதிநிதித்துவப்படுத்துகின்றார்.

எனவே பஸில் ராஜபக்ஷ பாராளு மன்ற உறுப்பினராகவோ, அமைச்ச ராகவோ, பிரதமராகவோ நியமிக்கப்படு வதில் எவ்வித சிக்கலும் கிடையாது. பஸ ில் ராஜபக்ஷ என்பவர் நிறைவேற்றதிகார ஜனாதிபதியை விட அதிகாரம் மிக்கவரா என்று அவர் தொடர்பில் கருத்துக்களை வெளியிடும் அமைச்சர்களிடம் கேள்வி யெழுப்ப விரும்புகின்றோம்-என்றார்.

# இனந்தெரியாத குழு அட்டாகசம் வாள்வெட்டு, சொகுசு காருக்கு தீ!

### முல்லைத்தீவில் நேற்று முன்தினம் இரவு சம்பவம்




முல்லைத்தீவு, ஜூன் 29

முல்லைத்தீவு மாவட்டத்தின் முல்லைத்தீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கள்ளப்பாடு வடக்கு பகுதியில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு வீடு புகுந்த சுமார் 7 பேர்கொண்ட கும்பல் ஒன்று வீட்டிலிருந்தவர்கள் மீது வாளால் வெட்டுத் தாக்குதல் நடத்தியது. அத்துடன், அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனங்கள்மீதும் தாக்குதல் நடத்தி சேதப்படுத்தியதுடன் கார் ஒன்றுக்கு தீ வைத்துவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

கள்ளப்பாட்டில் வசித்து வரும் குடும்பம் ஒன்றின் வீட்டிற்குள் மதிலேறி குதித்து சென்ற இனம் தெரியாத நபர்கள் வீட்டில் இருந்தவர்கள் மீது சரமாரியாக வாள்வெட்டு தாக்குதல் நடத்தியுள்ளனர்.

பின்னர் சுமார் 60 இலட்சத்துக்கும் அதிகமான பெறுமதியுடைய சொகுசு காருக்கு தீவைத்து விட்டு தப்பிச் சென்றுள்ளனர் இதன் போது கே டி எச் ரக வாகனம் ஒன்று சேதமடைந்துள்ளது அத்தோடு சொகுசு கார் ஒன்று முற்றாக எரிந்துள்ளது.

வாள்வெட்டு சம்பவத்தில் படுகாயங்களுக்கு உள்ளான ஒருவர் முல்லைத்தீவு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் குறித்து பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்ட நிலையில் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற முல்லைத்தீவு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றார்கள்.

இதேவேளை, நேற்று அங்கு சென்ற முல்லைத்தீவு தடயவியல் பொலிஸார், விசேட அதிரடிப்படையினர் ஆகியோர் சோதனைகளை நடத்தினர். வீட்டிலிருந்த சி.சி.டி.வி காணொலி ஆதாரங்களுடன் குறித்த செயற்பாட்டில் ஈடுபட்டவர்களை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். தாக்குதலை நடத்திய குழுவினரால் வீட்டிலிருந்த சி.சி.டி.வி கெமராக்கள் இரண்டும் சேதமாக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

குறித்த நடவடிக்கையினால் சுமார் ஒரு கோடியே நாற்பத்தைந்து இலட்சம் வரை சேதம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கும் குடும்பத்தினர், தாம் வீட்டில் வாழ முடியாத அச்ச சூழல் ஏற்பட்டுள்ளதாகவும் சம்பந்தப்பட்டவர்களை கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்துமாறும் கோரியுள்ளனர்.

## யாழில்...

உயிரிழந்தனர்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தி யசாலை ஆய்வுகூடத்தில் நடத்தப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகளிலேயே இந்தத் தகவல் வெளியானது.

இதன்படி, பருத்தித்துறை மருத்துவ அதிகாரி பிரிவில் 18 பேரும், யாழ்ப் பாணம் மாநகர மருத்துவ அதிகாரி பிரிவில் 10 பேரும், காரைநகர் மருத்துவ அதிகாரி பிரிவில் 09 பேரும், நல்லூர் மருத்துவ அதிகாரி பிரிவில் 08 பேரும், உடுவில் மருத்துவ அதிகாரி பிரிவில் 4பேரும், சங்கானை மருத்துவ அதிகாரி பிரிவில் 3 பேரும் கரவெட்டி மருத்துவ அதிகாரி பிரிவில் 2 பேரும் சாவகச்சேரி, வேலணை, மருதங்கேணி மருத்துவ அதிகாரி பிரிவுகளில் தலா ஒருவரும், யாழ். போதனா வைத்தியசாலையில் ஒருவருமாக 58 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர்.

இதேபோன்று கிளிநொச்சி பொது மருத்துவமனையிலும், மன்னார் பொது மருத்துவமனையிலுமாக இருவர் தொற் றாளர்களாக அடையாளம் காணப்பட் டனர்.

இதேவேளை, நேற்றைய தினம் கொரோனா தொற்றால் நால்வர் உயிரி ழந்தனர். யாழ். மாநகர மருத்துவ அதி காரி பிரிவில் 86 வயது ஆணும், யாழ். போதனா வைத்தியசாலையில் 91 வயது ஆணும், 78 வயது ஆணுமாக மூவர் உயிரிழந்தனர். மன்னார் பொது மருத்து வமனையில் 74 வயது பெண் தொற்றுக்கு பலியானார். (ஐ)

## ஹிருணிக்கா ...

நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்று கையிலேயே அவர் இந்த கோரிக்கையை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

துமிந்த சில்வா ஜனாதிபதி பொது மன்னிப்பின்கீழ் வெளியில் வந்துள்ளார். இது தொடர்பில் எனக்கு பிரச்னை கிடையாது. ஆனால் நீதியை நடை முறைப்படுத்துவது தொடர்பில் பிரச்னை எழுந்துள்ளது. நீதி உரிய வகையில் செயற்படுத்தப்படுகின்றதா என்ற கேள்வியும் எழுகின்றது.

ஹிருணிக்காவின் உயிர் பாதுகாப் புக்கான பொறுப்பை ஜனாதிபதி ஏற்க வேண்டும். அவருக்கு தேவையான பாதுகாப்பை அரசாங்கம் வழங்கவேண் டும். தாய் உள்ளிட்ட குடும்ப உறுப்பினர் களுக்கும் பாதுகாப்பு வழங்கவேண்டும்- என்றார்.

## 4 மில்லியன்...

சாங்கத்தினால் வழங்கப்படும் நிவார ணம் தொடர்பில் கருத்து தெரிவித்த அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் இக்னேஷியோ கெசிஸ், அனைவரும் ஒன்றாக ஒன்றிணைவதன் மூலம் மாத் திரமே இத்தொற்றை முற்றாக ஒழிக்க முடியும். இதற்கு சர்வதேச ஒத்துழைப்பு அத்தியவசியம் என தெரிவித்தார்.

இந்த நன்கொடை தொடர்பில் சுவிட்சர்லாந்து மக்களுக்கு தனது நன் றியை தெரிவித்த பிரதமர், இரு நாடுக ளுக்கும் இடையே காணப்படும் வலு வான ஒத்துழைப்பை தொடர்ச்சியாக பேணுவதன் முக்கியத்துவம் குறித்து வலியுறுத்தினார்.

கொவிட்-19 தொற்று நிலைமையை கட்டுப்படுத்துவதற்கு தேவையான ஒட் சிசன் செறிவு கருவி மற்றும் மரபணுச் சோதனை அமைப்பு உள்ளிட்டவை இந்த மருத்துவ உபகரண தொகுதியில் உள்ளடங்குகின்றன.

ஈழநாடு
Eelanadu

## சிறுத்தை இறைச்சி விற்பனை: கைதான மூவருக்கும் பிணை!

வலப்பனை, ஜூன் 29

வலப்பனையில் சிறுத்தை இறைச்சியை விற்பனை செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட மூவரும் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் ஒருவர் ஒரு இலட்சம் ரூபா சரீரப்பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

சிறுத்தை ஒன்றை பொறிவைத்து பிடித்து அதனை கொன்று இறைச்சியை விற்பனை செய்த குற்றச்சாட்டில் வலப்பனை - மூர் ஓயா தோட்டத்தைச் சேர்ந்த மூவர் கைது செய்யப்பட்டனர்.

இந்தச் சம்பவம் கடந்த 23 ஆம் திகதி இடம்பெற்றுள்ளது.

சந்தேகநபர்களில் ஒருவர், சிறுத்தையின் புகைப்படத்தை தனது மற்றுமொரு நண்பருக்கு வட்ஸ்-அப் மூலம் அனுப்பியுள்ளார்.

இந்தப் புகைப்படம் தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் பின்னர் நல்லத்தண்ணி வன ஜீவராசிகள் அலுவலகத்தால் சந்தேகநபர்கள் மூவரும் கைதுசெய்யப்பட்டனர்.

இந்நிலையில், சம்பவம் தொடர்பிலான வழக்கு விசாரணை எதிர்வரும் 07 ஆம் திகதி இடம்பெறும் என்று வலப்பனை நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (இ)

## கொரோனா பிறழ்வு குறித்து மற்றுமோர் ஆய்வு ஆரம்பம்

கொழும்பு, ஜூன் 29

டெல்டா உள்ளிட்ட கொரோனா பிறழ்வுகளின் பரவலினால் நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பில் ஆராய்வதற்காக மற்றுமொரு பரிசோதனை நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

முழு நாட்டையும் உள்ளடக்கிய வகையில் மாதிரிகளைச் சேகரிப்பதாக ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை, நீர்பீடணம், உயிரணு தொடர்பான கற்கை நிறுவகத்தின் பணிப்பாளர் பேராசிரியர் சந்திம ஜீவந்தர தெரிவித்தார்.

நூற்றுக்கும் அதிகமான மாதிரிகளைக் கொண்டு ஆய்வை முன்னெடுக்கவுள்ளதாகவும் அவர் கூறினார்.

ஏழு நாட்களுக்குள் குறித்த பரிசோதனை அறிக்கையை வெளியிடுவதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (இ)

## ரஞ்சன் ராமாநாக்கவுக்கு முழங்காலில் சத்திர சிகிச்சை!

கொழும்பு, ஜூன் 29

சிறைத் தண்டனை அனுபவித்து வரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க கொழும்பு கராபிட்டி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இவர் கடந்த 23ஆம் திகதி தொடக்கம் இந்த மருத்துவமனையில் பொலிஸாரின் பாதுகாப்பில் சிகிச்சை பெற்று வருகின்றார் என்று கூறப்படுகின்றது.

நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு 4 வருட கடூழிய சிறைத் தண்டனை இந்த ஆண்டு தொடக்கத்தில் விதிக்கப்பட்டது.

அங்குனுகொலபெலச சிறையில் தண்டனை அனுபவித்துவரும் அவருக்கும் முழங்காலில் காயம் இருப்பதாக சிறை மருத்துவர்கள் உறுதிப்படுத்தினர். இதைத் தொடர்ந்து சத்திர சிகிச்சை செய்யப்பட்டது. தற்போது அவர் தேறி வருகிறார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)



# யாழ்ப்பாணத்தில் நேற்று 9,988 பேருக்கு தடுப்பூசி!

யாழ்ப்பாணம், ஜூன் 28

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நேற்று 9ஆயிரத்து 988 பேர் கோவிட் - 19 தடுப்பூசியின் இரண்டாவது டோஸைப் பெற்றனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கோவிட்- 19 தடுப்பூசி வழங்கல் திட்டத்தின் கீழ் முதல்கட்டமாக 50 ஆயிரம் தடுப்பூசிகள் யாழ்ப்பாணத்திற்கு கடந்த மே மாத இறுதியில் கிடைக்கப்பெற்றன.

இவை சுகாதார அமைச்சின் தொற்றுநோய் பிரிவின் வழிகாட்டலுக்கமைவாக கோவிட் - 19 தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நோயாளர்கள்களின் எண்ணிக்கையின் முன்னிலை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட கிராம அலுவலர் பிரிவுகளுக்கு வழங்கப்பட்டன.

இவ்வாறு ஒதுக்கீடு செய்யப்பட்ட கோவிட்-19 தடுப்பூசியின் முதல் டோஸை பெற்ற பொது மக்களுக்கு இரண்டாவது டோஸை வழங்கும் பணி நேற்று ஆரம்பமானது. எதிர்வரும் வரும் ஜூலை 2ஆம் திகதிவரை இரண்டாவது டோஸ் வழங்கும் பணி முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்த நிலையில், சங்கானையில் 407, சாவகச்சேரியில் 1459, யாழ். மாநகரில் 1168, காரைநகரில் 952, கரவெட்டியில் 420, ஊர்காவற்றுறையில் 458, கோப்பாயில் 1680, மருதங்கேணியில் 382, நல்லூரில் 70, பருத்தித்துறையில் 796, சண்டிலிப்பாயில் 1240, தெல்லிப்பழையில் 150, உடுவிலில் 700, வேலணையில் 106 என 9ஆயிரத்து 988 பேருக்கு தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் ஏற்றப்பட்டது. (ஐ- 2)

## அஸ்ட்ராசெனகாவுக்கு பதிலாக பைஸர்

கொழும்பு, ஜூன் 29

அஸ்ட்ராசெனகா தடுப்பூசியின் முதல் டோஸை பெற்றவர்களுக்கு இரண்டாவது டோஸுக்கு பதிலாக பைஸர் அல்லது மொடர்னா தடுப்பூசிகளை வழங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமண தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கைக்கு 10 இலட்சம் பைசர் தடுப்பூசிகள் கிடைக்கவுள்ளன. இவற்றில் ஒரு தொகுதி அடுத்த வாரம் கிடைக்கும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)







இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 29.06.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**

6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
07.05 மணி : உளவியல் கருத்து-உளவள துனையாளர் திரு.நா.நவராஜ்




7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்



7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : சொற்சமர்-மறுஒளிபரப்பு
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை

பகல்

1.00 மணி : மழலைகள் நேரம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-பொட்டு,தடம் திரைப்படக் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களை மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி




5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : சினிமா சினிமா
6.30 மணி : மூவி டோக்கீஸ்-வேற்று மொழி திரைப்படங்களின் விமர்சனம்

**இரவு**

7.00 மணி : கதை நேரம்-நகைச்சுவை நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சங்கப்பலகை-இலக்கிய நிகழ்ச்சி
10.00 மணி : நேருக்கு நேர்

## DAN COMEDY HD

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன்
கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**

8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**

5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி :கந்தசஷ்டி கவசம்

**இரவு**

7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை

## CHANNEL HOLY MARY

**காலை**

7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபமாலை

**பகல்**

12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்சிந்தனை
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி :நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)

## Pirai Television

**காலை**

6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு